விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 12.03.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 102 | பக்கங்கள் : 16

# ஐ.நா அறிக்கையாளர்களின் பரிந்துரைகளை இலங்கை நடைமுறைப்படுத்தவேண்டும்!

## நகல் பிரேரணையில் இணைத்தது பிரிட்டன்

ஜெனிவா, மார்ச் 12

இலங்கைக்கு 2015ஆம் ஆண்டின் பின்னர் விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளர்களின் பரிந்துரைகளை இலங்கை நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற வேண்டுகோளை இலங்கை குறித்த தீர்மானத்தின் நகல் வரைவில் இணைத் துள்ளதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது. 02

## மனித உரிமைக்காக போராடுவோரை துன்புறுத்தக் கூடாது!

### 8 நாடுகளின்தூதுவர்கள் வலியுறுத்தல்

ஜெனிவா, மார்ச் 12

மனித உரிமைகளுக்காக பாடுபடும், சட்டத் தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா போன்றோர் துன் புறுத்தப்படக்கூடாது என்று நெதர்லாந்து, ஜேர்மனி, இங்கிலாந்து, சுவீடன், எஸ்டோனியா, லித்துவேனியா, பின்லாந்து மற்றும் லக்சம்பர்க் ஆகிய நாடுகளின் மனித உரிமைகள் தூதுவர்கள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

மனித உரிமைகளுக்காக முன்னிற்கும் சட்டத் தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா போன்றோரை துன்புறுத்தக்கூடாது என்பதுடன், அவர் களை பாதுகாக்கவேண்டும் எனவும் குறித்த நாடுகளின் தூதுவர்கள் கூட்டறிக்கையூ 02

### கொரோனா சிகிச்சை நிலையங்களாக உள்ள

## ஆசிரியர் கலாசாலைகளை உடன் விடுவிக்கவேண்டும்

கொழும்பு, மார்ச் 12

கொரோனா சிகிச்சை மையங்களாகப் பயன்படுத்தப்படும் 19 ஆசிரியர் பயிற்சி மையங்கள் விரைவில் அகற்றப்படாவிட் டால், எதிர்காலத்தில் ஆசிரியர்களின் பெரும் பற்றாக்குறை ஏற்படும் என்று இலங்கை அதிபர்கள் சங்கம் சுட்டிக் காட்டுகிறது.

ஊடகங்களுடன் பேசிய அதன் செய லாளர் பியாசிறி பெர்னாண்டோ, மூன்று ஆண்டு காலத்துக்கு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் மற்றும் அறிவியல் பீடங்களில் புதியவர்களைப் பயிற் றுவிக்கவேண்டும் என்று கூறினார். 02



06

30 ஆண்டுகளின் பின் குருந்தூர்மலையில் சிவராத்திரி



09

ரணிலை தப்ப வைக்க மைத்திரிக்கு சிறை



10

ஹிட்லரின் போக்கில் கோட்டா அரசு



13

மேற்கிந்தியாவிடம் மண்டியிட்டது இலங்கை



## படகு மூலம் கனடா செல்ல முயன்ற 24 பேர் கற்பிட்டியில் வைத்து கைது

கொழும்பு, மார்ச் 12.

கற்பிட்டிப் பகுதியிலிருந்து சட்டவிரோதமான முறையில் படகு மூலமாக கனடாவுக்குச் செல்வதற்காகக் காத்திருந்த 24 இலங்கையர்கள் நேற்று அதி காலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட நடவடிக்கை ஒன் றின் மூலம் கற்பிட்டி பகுதியில் வைத்து இவர்கள் கைது செய் யப்பட்டனர் எனக் கடற் படையினர் தெரிவித்த னர். 02

## கொரோனா தொற்றால் மேலும் ஐவர் உயிரிழப்பு

### இதுவரை 520 பேர் மரணம்

கொழும்பு, மார்ச்.12

நாட்டில் கொரோனா தொற் றால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதி கரித்து வருகின்றது. இந்நிலை யில் கொரோனாவால் இறுதியாக 5 மரணங்கள் பதிவாகியுள்ளன என 02

## மியன்மாரில் இராணுவ ஆட்சியை ஏற்றுக்கொள்கின்றதா இலங்கை?

### அந்த நாட்டு மக்கள் கொதிப்பு

கொழும்பு, மார்ச்.12

மியன்மார் இராணுவ அர சாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் வுன்னா மாவுங் லுவினை பிம்ஸ்ரெக் மாநாட் டில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்து வெளிவிவகார அமைச் சர் தினேஷ் குணவரத் தன அனுப்பியுள்ள கடிதத்துக்கு மியன்மார் 02

## யாழில் பயிற்சிப் பட்டறையில் பங்கேற்ற இருவருக்கு தொற்று

யாழ்ப்பாணம், மார்ச்.12

யாழ்ப்பாணத்தில் மேலும் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத் தப்பட்டது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள் ளார்.

யாழ். பல்கலைக்கழக மருத் துவபீட ஆய்வுகூடத்தில் 319 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத் தப்பட்டன.

இதில் சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதி 02

## பௌத்த பிக்குகள் ஓரணியில் திரண்டு சுதந்திர சதுக்கத்தில் சத்தியாக்கிரகம்!

### இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்கும் கொள்கைத் திட்டம் அரசாங்கத்திடம் கையளிப்பு

கொழும்பு, மார்ச்.12

ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக் கைக்கும், பொதுபல சேனா அமைப்பு உட்பட பௌத்த அமைப்புக்களைத் தடை செய்ய முன் வைக்கப்பட்டுள்ள யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நேற்றுப் பொதுபல சேனா அமைப்பினரும், பௌத்த பிக்குகள் சங்கத் 02

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## பௌத்த....

தினரும் ஒன்றிணைந்து சுதந்திர சதுக்கத்தில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்கும் கொள்கைத் திட்டங்களை மார்ச் 11 எனப் பெயர் குறிப்பிட்டு அரசாங்கத் திடம் கையளித்தனர்.

இந்த கொள்கைத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

விடுதலைப் புலிகள் அமைப்பு செயல்பட்ட காலகட்டத்தில் இராணுவத்தின் உளவாளிகளாகச் செயல்பட்ட பயங்கரவாதி சஹ்ரான் ஹாசிம் உட்பட முஸ்லிம் இளைஞர்களுக்கு யார் ஆயுதம், நிதியுதவி வழங்கியது, வழங்கப்பட்ட ஆயுதங்கள் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டதா? இல்லையெனில் அந்த ஆயுதங்களுக்கு என்ன நடந்தது?

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு அரசியல் நோக்கங்களை விடுத்து தண்டனை வழங்கப்படவேண்டும்.

இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர்பில் முன்னாள் நீதியமைச்சர் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி பாராளுமன்றில் ஆற்றிய உரைக்கு எதிர்ப்புத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், அனாஸ் நசீர், முஜிபுர் ரஹ்மான், தேசிய சுரா கவுன்சிலின் தலைவர் தரிக் மொஹமட், இலங்கை முஸ்லிம் கவுன்சிலின் தலைவர் எம்.எம் அலிம், ஐக்கிய தவ்ஹீத் ஜமாத் அமைப்பு, முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா ஆகியோருக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

கட்டுவாப்பிட்டிய தேவாலயத்தில் குண்டுத் தாக்குதல் நடத்திய தீவிரவாதியின் மனைவியான சாரா உயிருடன் உள்ளாரா? என்பது தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்படவேண்டும்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கான விசாரணை விசேட மேல்நீதிமன்றம் ஊடாக நாளாந்தம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்.

பொதுபல சேனா அமைப்பை தடை செய்யவும், பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவும் ஆணைக்குழு முன்வைத்துள்ள யோசனையை மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தை முன்னெடுக்க தயாரான காரணிகளை பயங்கரவாதி சஹ்ரான் குறிப்பிட்டுள்ளதாக ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக் காரணிகளான,

அல்லாஹ் கடவுளுக்கான கடமைகளின் ஒன்றாக, கடவுளால் படைக்கப்பட்ட இஸ்லாமிய இராச்சியத்தில் சிரியாவில் முஸ்லிம் சமூகத்தினர் படுகொலை செய்யப்பட்டமைக்கு பழிவாங்கும் வகையில், நியூசிலாந்து கிறைஸ்ட்சேர்ச் முஸ்லிம் பள்ளியில் இடம்பெற்ற தாக்குதலுக்கு பழிவாங்கும் வகையில் என்று குறிப்பிடப்பட்டுள்ளன. இதற்கும் இலங்கைக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

இனம், மதக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு அரசியல் கட்சிகள் செயல்படுகின்றமையால் தேசிய நல்லிணக்கம் பாதிக்கப்படுகின்றது. ஆகவே, இவ்வாறான அரசியல் கட்சிகளை முழுமையாக தடை செய்ய வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து யோசனைகள் குறித்தும் அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-எ)

## கொரோனா....

அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 520 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று வியாழக்கிழமை இரவு 9.30 மணி வரை 292 புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

இதற்கமைய மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கை 86 ஆயிரத்து 977ஆக அதிகரித்துள்ளது.

இனங்காணப்பட்ட மொத்த தொற்றாளர்களில் 83 ஆயிரத்து 561 பேர் குணமடைந்துள்ளதோடு, 2767 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நாவலப்பிட்டியைச் சேர்ந்த 56 வயது பெண்ணொருவரும், அங்குலான பகுதியைச் சேர்ந்த 63 வயது பெண்ணொருவரும், மத்தேகொடை பகுதியைச் சேர்ந்த 80 வயதான பெண்ணொருவரும், பிபில பகுதியைச் சேர்ந்த 67 வயதுடைய ஆணொருவரும், தெஹிவளை பகுதியைச் சேர்ந்த 68 வயதான ஆணொருவருமே இவ்வாறு இறுதியாக கொரோனா தொற்றால் உயிரிழந்தனர். (அ-எ)

## ஐ.நா. அறிக்கை....

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை குறித்த தீர்மானம் பற்றிய கலந்தாலோசனையின் போதே பிரிட்டனின் பிரதிநிதி இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இலங்கை விஜயத்தின் பின்னர் ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளர்கள் பல ஆக்கபூர்வமான பரிந்துரைகளை முன்வைத்துள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தனது நாடு இந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைக்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் தயாரிக்கப்பட்டு தற்போது விவாதிக்கப்பட்டுக்கொண்டுள்ள நகல் தீர்மானத்தில் இந்த யோசனை இணைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தீர்மானத்தின் நகல் வரைவில், கொரோனா வைரஸினால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்படுவது தொடர்பில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களை நீக்கவேண்டும் என்ற இலங்கையின் கோரிக்கையை பிரிட்டன் நிராகரித்துள்ளது. இந்த விவகாரத்துக்கு தீர்வு காணப்பட்டுவிட்டதன் காரணமாக இது அவசியமில்லை என இலங்கை தெரிவித்துள்ளது.

எனினும் கடந்த பத்து மாதங்களுக்கு மேல் கரிசனைக்குரிய விடயமாக இது காணப்பட்டதால் தனது நாடு இந்த நிலைப்பாட்டை எடுப்பதாக பிரிட்டன் பிரதிநிதி தெரிவித்தார்.

மார்ச் 7ஆம் திகதி வரை 24 பேரின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டதை வரவேற்றுள்ள பிரிட்டன் எனினும் 90 வீதமானவர்களை புதைக்கமுடியவில்லை என்பதை சுட்டிக்காட்டியுள்ளது.

நேற்றைய அமர்வின்போது சீனா, ரஷ்யா, பாக்கிஸ்தான், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக கருத்து வெளியிட்டிருந்தன. இலங்கை அரசாங்கம் விசாரணை ஆணைக்குழு ஒன்றை நியமித்திருப்பதை அங்கீகரிக்க வேண்டும் என பாகிஸ்தான் இதன்போது கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தது.

## படகு மூலம்....

கற்பிட்டி கடலேரிப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமாக நிறுத்தப்பட்டிருந்த லொறி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. அதனையடுத்து லொறி சாரதி உட்பட 24 பேர் கைது செய்யப்பட்டனர். கடல் மார்க்கமாக கனடாவுக்குச் செல்வதற்காக இவர்கள் காத்திருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் 20 ஆண்கள், இருவர் பெண்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. ஆண் குழந்தை ஒன்றும் இவர்களுடன் கைது செய்யப்பட்டதாக கடற்படை தெரிவித்தது.

கைதானவர்களில் ஒன்பது பேர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள். ஆறு பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். ஐந்து பேர் முல்லைத்தீவையும், மூவர் திருமலையையும் சேர்ந்தவர்களாவர். லொறிச் சாரதி புத்தளத்தைச் சேர்ந்தவர் எனவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

# படுத்துறங்கிய இளைஞர் மீது கொலை வெறித் தாக்குதல்!

**பருத்தித்துறையில் வன்முறை**

யாழ்ப்பாணம், மார்ச் 12

கடற்கரை ஓய்வுக் கொட்டகையில் படுத்துறங்கிய இளைஞனை இரும்புக் கம்பியினால் கொடூரமாக அடித்து வீதியால் இழுத்துச் சென்று வீசிய கொடூரம் பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் சுப்பர்மடத்தைச் சேர்ந்த 22 வயதுடைய ஜெகதீசன் நீகன் என்ற இளைஞனே மிக மோசமான அடிகாயங்களுடன் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

முன் பகையின் காரணமாகவே இந்த கொடூரத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மூவர் இணைந்து இரும்புக் கம்பியினால் மிக மூர்க்கமாகத் தாக்கியுள்ளனர்.

தாக்கப்பட்டவரது கை மற்றும் கால்கள் முறிந்த நிலையில் அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றதாக அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## மியன்மாரில்....

நாட்டு மக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். இதனூடாக, இலங்கை, மறைமுகமான முறையில் மியன்மாரின் இராணுவ ஆட்சியை ஏற்றுக்கொண்டுள்ளதாக, சமூக வலைதளங்களில் மியன்மார் பிரஜைகள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

#ShameOnYouSriLanka என்ற ஹாஷ்ரக் ஊடாக ருவிட்டரில் அவர்கள் தொடர்ச்சியாக தங்களது எதிர்ப்பை பதிவு செய்துள்ளனர்.

பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா கூட்டமைப்பு என்ற பிம்ஸ்ரெக் அமைப்பின் தற்போதைய தலைமைத்துவத்தை இலங்கை வகிக்கின்றது.

பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மியன்மார், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து முதலான நாடுகள் இந்த கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

இந்தக் கூட்டமைப்பின் 17ஆவது அமைச்சர்கள் மாநாடு, எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி இணையவழி மெய்நிகர் மாநாடாக கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் பங்கேற்குமாறு, வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தனவின் கையொப்பத்துடன், மியன்மார் இராணுவ அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சரான வுன்னா மாவுங் லுவினுக்கு அழைப்பு விடுத்து, கடந்த 2ஆம் திகதி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே இவ்வாறான கடிதமொன்றை அனுப்பியதன் மூலம், மியன்மார் ஆட்சியை இலங்கை ஏற்றுக் கொண்டுள்ளதாக மியன்மார் பிரஜைகள் தங்களது ருவிட்டர் மற்றும் பேஸ்புக் பதிவுகளில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பிம்ஸ்ரெக் அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக மியன்மார் வெளிவிவகார அமைச்சருக்கு விடுக்கப்பட்ட அழைப்பு தொடர்பில் சமூக வலைதளங்களில் வெளியாகும் கருத்துக்கள் குறித்து வெளிவிவகார அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையில், பிம்ஸ்ரெக் மாநாட்டுக்கு தலைமை தாங்கும் இலங்கை, இந்த வருட இறுதியில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்டுள்ள 5ஆவது உச்சிமாநாட்டின் ஆவணங்களை இறுதிப்படுத்தும் நோக்குடன், அது சம்பந்தமான கலந்துரையாடல்களில் பங்கேற்பதற்காகவே மியன்மார் உள்ளிட்ட அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி, மியன்மார் தலைவர் ஆன் ஷாங் சூகியின் ஆட்சியை கவிழ்த்து, ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவத்தினருக்கு எதிராக அந்த நாட்டில் பாரிய எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் இதுவரையில் பலர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ)

## ஆசிரியர்....

இருப்பினும், 19 ஆசிரியர் பயிற்சி மையங்களை கொரோனா சிகிச்சை மையங்களாகப் பயன்படுத்துவதால், புதிய ஆட்களுக்கான பயிற்சி இல்லாததால் ஆசிரியர்கள் பெரும் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது என்று திரு பிய சிறி பெர்னாண்டோ கூறினார்.

## யாழில்....

காரி பிரிவில் இருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

தொண்டு நிறுவனம் ஒன்று நடத்திய பயிற்சிப் பட்டறையில் பங்கேற்ற 29 பேரிடம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் கிளிநொச்சி மற்றும் பதுளையைச் சேர்ந்தவர்களுக்கே தொற்று கண்டறியப்பட்டது.

இதேவேளை, யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 371 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் எவருக்கும் தொற்று கண்டறியப்படவில்லை என மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார். (அ-எ)

## மனித....

டாக வலியுறுத்தியுள்ளனர்.

திறமை வாய்ந்த சட்டத்தரணியான ஹிஜாஸ் ஹிஸ்புல்லா 2020 ஏப்ரல் மாதம் முதல் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தாம் மிகவும் கவலையடைவதாக மனித உரிமைகளுக்கான தூதுவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மனித உரிமைகளுக்காக போராடுபவர்களை, பாதுகாப்பதும் ஊக்குவிப்பதும் எந்தவொரு நாட்டினதும் அவசியம் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அவ்வாறானோரை பாதுகாப்பது அனைத்து அரசாங்கங்களின் பொறுப்பாகும் எனவும் அவர்களை துன்புறுத்தலாகாது எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

## சிவராத்திரி....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினால் அவருக்கு கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. தற்போது, பஞ்சாபிகேசனின் பேரப்பிள்ளைகளான சித்தார்த் மற்றும் பிரதித் ஆகியோர் அவர்களது பாட்டனார் வழிநின்று, சிறந்த நாதஸ்வர கலைஞர்களாக இலங்கையில் மட்டுமல்ல. வெளிநாடுகளிலும் இசைக்கச்சேரிகளை நடத்தி வருகின்றனர்.

திருக்கேதீஸ்வர ஆலய மகிமையைப் பற்றி குறிப்பிடும்போது இத்திருத்தலம் கி. பி ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்த நாயனாரால் பாடல்பெற்ற திருத்தலம் என்பது குறிப்பிடத்தக்கது. திருஞானசம்பந்தரால் பாடல்பெற்ற மற்றைய திருத்தலமே திருகோணமலையில் அமைந்துள்ள திருக்கோணேஸ்வரர் ஆலயம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருக்கேதீஸ்வர சிவராத்திரி நிகழ்வுகளை நினைவு கூரும்போது 1971ஆம் ஆண்டு தமிழகத்தின் 'கலைமகள்' சஞ்சிகை ஆசிரியரும், சிறந்த ஆன்மீக பேச்சாளருமான காலஞ்சென்ற 'வாகீச கலாநிதி' கி. வா. ஜகந்நாதன் திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரியின் நான்கு சாம வேளைகளிலும் ஆன்மீகப்பேருரை நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, மன்னார் மாதோட்டத்தில், பாலாவி ஏரிக்கரையில் அமைந்துள்ள திருக்கேதீஸ்வர திருத்தலம், இலங்கை ஒரு சிவபூமி என்பதையே பறைசாற்றி அமைந்திருக்கின்றது.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
12.03.2021 வெள்ளிக்கிழமை
சார்வரி, மாசி 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# இராணுவ ஆட்சிக்கு செங்கம்பளம்?

கிழக்காசிய நாடான மியன்மாரில் அண்மையில் மீண்டும் இராணுவ ஆட்சி ஏற்பட்டிருந்தது. இதுதொடர்பில் உலகெங்கும் கடுமையான எதிர்ப்புக்கள் நிலவிவருகின்ற நிலையில், அந்த நாட்டின் இராணுவ அரசாங்கத்திற்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன அனுப்பியிருக்கும் கடிதம் மியன்மார் ஜனநாயக செயல்பாட்டாளர்கள் மத்தியில் கடுமையாக விமர்சிக்கப்படுகின்றது. ‘இலங்கையின் வெட்கித் தலைகுனியும் செயல்’ - என்னும் தலைப்பில் சமூகஊடகங்களில் இது பரவலாக விவாதிக்கப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து, இராணுவ ஆட்சிக்கு எதிராக குரல்கொடுத்துவரும் உலகெங்குமுள்ள ஜனநாயக செயல்பாட்டார்களின் கவனத்தை இந்த விடயம் ஈர்த்திருக்கின்றது. வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, மியன்மார் இராணுவ அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சரான வுன்னா மவுங் லுவினை, இலங்கையில் இடம்பெறும் ‘பிம்ஸ்ரெக்’ எனப்படும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா கூட்டமைப்பின் மகாநாட்டில் பங்குகொள்ளுமாறு உத்தியோகபூர்வமாக அழைத்திருக்கின்றார். தினேஸ் குணவர்த்தன அனுப்பியிருக்கும் கடிதம் சமூக ஊடகங்களில் பரவலாக பகிரப்பட்டுவருகின்றது. இதன்மூலம், அண்மையில் மியன்மாரில் இடம்பெற்ற இராணுவ சதிப்புரட்சியை அங்கீகரித்திருக்கும் முதலாவது நாடாக இலங்கை விளங்குகின்றது.

நீண்டகாலமாக இராணுவ ஆட்சியின் கீழிருந்த மியன்மாரில், 2010 இற்கு பின்னர் சில மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. இராணுவ தலைமையின் கடும்போக்கில் சில தளர்வுகள் காணப்பட்டன. இதனைத் தொடர்ந்து, நீண்ட காலமாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த மியன்மாரின் தேசிய ஜனநாயக கட்சியின் தலைவியான ஆங்சான் சூகி மீண்டும் அரசியலில் செயல்படுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார். இந்த பின்புலத்தில், 2015இல் சுதந்திரமான முறையில் தேர்தல் இடம்பெற்றது. சூகியின் தேசிய ஜனநாயக கட்சி வெற்றிபெற்றது. இதன் பின்னர் ஆங்சான் சூகி மேற்குலக நாடுகளுக்கு சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு, மேற்குலக தாராளவாத ஜனநாயகத்திற்கும் மியன்மாருக்கும் இடையில் நிலவிய தொடர்பறுந்த நிலைமையை சரிசெய்வதில் பல முன்னெடுப்புக்களை மேற்கொண்டிருந்தார். ஆங்சான் சூகிக்கு அமைதிக்கான நோபல் பரிசும் வழங்கப்பட்டிருந்தது. இதே 2015இல்தான் இலங்கையிலும் ஓர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருந்தது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

இவ்வாறானதொரு பின்புலத்தில், கடந்த பெப்ரவரி மாதம் மீளவும் மியன்மார் இராணுவம் நாட்டை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கின்றது. மீண்டும் ஆங்சான் சூகி மற்றும் அவரது கட்சியின் முக்கிய தலைவர்கள் வீட்டுக் காவலில் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறானதொரு நிலையில்தான் மியன்மாரின் இராணுவ ஆட்சியை அங்கீகரிக்கும் வகையில், இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, இராணுவ வெளிவிவகார அமைச்சருக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார். இது நிச்சயம் சர்வதேச அரங்குகளில் இலங்கைக்கு பாதகமான நிலைமையையே ஏற்படுத்தும். ஜெனிவா அமர்வு இடம்பெற்றுவருகின்ற நிலையில் இந்த விடயம் உலக அரங்குகளில் பேசுபொருளாகியிருக்கின்றது. அண்மைக்காலமாக இலங்கையில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்துவருகின்ற நிலையில், மியன்மாருக்கான மேற்படி அழைப்பு சந்தேகங்களையும் ஏற்படுத்தலாம். ஏனெனில், மியன்மார் இராணுவத் தலைமை சீனாவினால் வழிநடத்தப்படுவதாகவும் ஒரு விமர்சனம் உண்டு. மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில்தான், ரொஹிங்கிய முஸ்லிம் மக்களின் படுகொலைகளை வழிநடத்தியதாக குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான பிக்குகள் அமைப்பின் தலைவர் விராது, இலங்கைக்கு அழைக்கப்பட்டிருந்தார். இது அப்போது முஸ்லிம் மக்கள் மத்தியில் கடுமையான அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. இப்போது, இராணுவ ஆட்சிக்கு செங்கம்பளம் விரிக்கும் பணியை தினேஸ் குணவர்த்தன முன்னெடுக்க விரும்புகின்றார்.

*சிவராத்திரி நினைவலைகள்:*

# ‘கலைமகள்’ ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் ஆன்மீக பேருரை நிகழ்த்திய திருக்கேதீஸ்வரம்

**- அனந்த பாலகிட்ணர் -**

*இலங்கையில் வடக்கு-கிழக்கு யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர், சிவராத்திரி தினமென்பது ஓர் அற்புதமான அனுபவத்தையே வடக்கு - கிழக்கு மக்களுக்கு வழங்கியிருந்தது. இந்து மதத்தின் முழுமுதற்கடவுளான சிவபெருமானுக்குரிய முக்கிய தினமாக சிவராத்திரி விளங்குகின்றது. யுத்த சூழலற்ற, மிகவும் அமைதியான நிலைமை இலங்கையில் காணப்பட்டபோது, வராலற்றுச் சிறப்புமிக்க திருக்கேதீஸ்வர ஆலயம் சிவராத்திரி தினத்தில் பக்தி பூர்வமானதாக விளங்கியிருந்தது. இன்று, திருக்கேதீஸ்வரத்திற்கு யாழ்ப்பாணத்திலிருந்து சங்குப்பிட்டி பாலமூடாக இலகுவில் சென்றுவிடமுடியும். 2011ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சங்குப்பிட்டி பாலம் மன்னாரையும் யாழ்ப்பாணத்தையும் ஏ-32 நெடுஞ்சாலையூடாக இணைத்துவிட்டிருந்தது.*

**வரப்பிரசாதம்**

*இரட்டைப் பாதைகளைக்கொண்ட இப்பாலத்தின் முழுநீளம் 945அடிகளாகும். அகலம் 24 அடிகள். இதனுடைய நிர்மாணச் செலவு 1.037 பில்லியன் ரூபாய்கள். இப்பாலம், புவியியல் ரீதியாக யாழ்ப்பாண மக்களுக்கும் மன்னார் மக்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாகவே இருக்கின்றது. திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு மாத்திரமல்ல. மன்னாரில் அமைந்துள்ள கத்தோலிக்க மக்களின் புனித வழிபாட்டுத் தலமான மடுமாதா திருப்பதிக்கும் இப்பாலத்தின் ஊடாக இலகுவில் யாத்திரை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.*

*சங்குப்பிட்டிப்பாலம் அமைக்கப்படுவதற்கு முன்னர் யாழ்ப்பாண கடல் நீரேரி வழியாக சங்குப்பிட்டியிலிருந்து மன்னாருக்கு நீண்ட பாலம்போன்ற படகுச்சேவை மூலமாக வாகனங்களையும் ஏற்றி, யாத்திரிகர்கள் மன்னாரிலுள்ள திருக்கேதீஸ்வரம் மற்றும் மடுத் திருப்பதிக்கு சென்று வந்தனர். இது தவிர, ஏராளமான இளைஞர்கள் மிதிவண்டிகளில் காலையிலிருந்து இரவு நெடுநேரம் வரை திருக்கேதீஸ்வரம் நோக்கி சிவராத்திரி தினத்தில் சென்று கொண்டிருப்பார்கள்.*

**தண்ணீர் பந்தல்கள்**

*திருக்கேதீஸ்வரம் நோக்கிச்செல்லும் யாத்திரிகர்களுக்கென தென்மராட்சியின் வழிநெடுகிலும் தண்ணீர் பந்தல்கள்கூட போடப்பட்டிருக்கும். இதுதவிர, எழுபதாம் ஆண்டுகளுக்கு முன்னர் வடமாகாணத்தின் வன்னிப்பகுதிகளில் அரச சேவைகளில் தமிழர்களே அதிகளவு பணியாற்றியிருந்தனர். புகையிரத சேவை, தபால் சேவை போன்றவற்றிலெல்லாம் தமிழ் அதிகாரிகளே பெருமளவில் பணியாற்றியிருந்தனர். இந்நிலையில், மன்னார் நோக்கி தீருக்கேதீஸ்வரத்துக்கு புகையிரதங்களில் வருகின்ற யாத்திரிகர்களுக்கு வவுனியா, முருங்கன், மன்னார் ரயில் நிலையங்களிலெல்லாம் தண்ணீர்ப் பந்தல்கள் போடப்பட்டு, தாக சாந்தி அளிக்கப்படும்.*

*சிவராத்திரிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து பெரும்பாலும் பாடசாலை மாணவ, மாணவிகளும் பெருமளவில் செல்வது வழக்கமாக இருந்தது. அத்துடன், யாழ்ப்பாண பாடசாலை மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் திருக்கேதீஸ்வர ஆலய முன்றலில் அமைந்துள்ள மண்டபத்தில் இடம்பெறுவதும் வழக்கமாக இருந்து வந்தது.*

**மகா சிவலிங்கம்**

*திருக்கேதீஸ்வரத்தின் வரலாற்றுச் சிறப்புக்கு மெருகூட்டுவதாக ஐம்பதாம் ஆண்டுகளில் அகழ்வராச்சியாளர்களால் தீருக்கேதீஸ்வர ஆலய சுற்றாடலில் கண்டெடுக்கப்பட்ட கருங்கல்லினாலான மகாசிவலிங்கம் காணப்படுகின்றது. இச்சிவலிங்கம், 16ஆம் நூற்றாண்டில் மன்னார் போர்த்துக்கேயர் வசமானபோது, கத்தோலிக்க மதத்தை பரப்புவதற்காக, திருக்கேதீஸ்வரத்தில் இப்பெரும் சிவலிங்கம் அகற்றப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.*

*தற்போது, திருக்கேதீஸ்வர ஆலய உட்பிகாரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள இம் மகாசிவலிங்கம் சிவராத்திரி தினத்தில் பக்தர்களினால் மிகுந்த பக்தி பரவசத்துடன் வழிபடப்பட்டு வருகின்றது. சிவராத்திரி தினத்தில் திருக்கேதீஸ்வரம் வருகின்ற பக்தர்கள், மறுநாள் அதிகாலை பிரம்ம முகூர்த்த வேளையில் கேதீஸ்வரப் பெருமான் பாலாவியில் தீர்த்தமாடச் செல்லும்வரை பாலாவியிலிருந்து கலசங்களில் பாலாவி நீரை தலையில் ஏந்தி வந்து, ஆலய உட்பிரகாத்தில் இருக்கின்ற மகாசிவலிங்கத்துக்கு தமது கரங்களினாலேயே அபிஷேகம் செய்வர்.*

**ஆஸ்தான வித்வான் பஞ்சாபிகேசன்**

*சிவராத்திரி தினத்தில் மாலையானதும் கலை நிகழ்ச்சிகள் திருக்கேதீஸ்வர ஆலய முன்மண்டபத்தில் களைகட்ட ஆரம்பித்துவிடும். திருக்கேதீஸ்வர ஆலயத்தின் ஆஸ்தான வித்வானாக இருந்த சாவக்கச்சேரியைச் சேர்ந்த நாதஸ்வர வித்துவான் காலஞ்சென்ற கலாநிதி கே. எம். பஞ்சாபிகேசனின் நாதஸ்வர இசை மிக ரம்மியமானதாக அமைந்திருக்கும்.*

*பஞ்சாபிகேசன் ஓர் அற்புதமான நாதஸ்வர வித்வானாக இலங்கையில் திகழ்ந்திருந்தார். குடுமியோடு, காதுகளில் கடுக்கன்கள் ஜொலித்த நிலையில், பார்ப்பதற்கே நெடிதுயர்ந்து காணப்படும் அவரது தோற்றம் அவர் எங்கெல்லாம் நாதஸ்வர இசையை வழங்குகிறாரோ அங்கெல்லாம் ஏராளமான ரசிகர்களை கவர்ந்திழுப்பதாகவே அமைந்திருக்கும். வித்வான் பஞ்சாபிகேசனின் திறமைக்கு மகுடம் வைப்பதுபோல*

*(02ஆம் பக்கம் பார்க்க)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
எதையும் திட்டமிடுதல் அவசியம். குழப்பங்கள் விலகும். தொழிலில் சுமாரான வளர்ச்சியைப் பெறுவீர்கள். கலகலப்பு கூடும். பெரிய செலவுகளைத் திட்டமிட்டுச் செய்வது நல்லது.

**இடபம்**
இதுவரை இருந்து வந்த தடை விலகும். நிம்மதி கிடைக்கும். பணியில் பிரச்னை வந்தாலும் திறமை, உங்களைக் கைவிடாது. அலுவலகத்தில் எதிர்பார்த்த கடன் உதவி கிடைக்கலாம்.

**மிதுனம்**
பணியில், தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். இளைஞர்கள் சாதிக்க நினைத்து முயற்சிகள் செய்வர். திருப்தி தரும் நாள். மன வலி தீர்க்கும் சம்பவம் நடக்கும்.

**கடகம்**
அவசர முடிவு எடுக்க வேண்டாம். பணியில் கவனம் தேவை. மகிழ்ச்சியை மீறி சிறு உறுத்தல் இருக்கும். பேச்சில் கவனமாயிருங்கள். பலர் கேலி செய்த நிலை மாறி பாராட்டு கிடைக்கும்.

**சிம்மம்**
இளைஞர்களின் மனதில் புதியதோர் தன்னம்பிக்கை மலரும். பொறுமைக்கு பலன் உண்டு. சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்க அழைப்பு வரும். கையிருப்பு கூடும். புதிய பொழுது போக்கில் ஈடுபாடு வரும்.

**கன்னி**
அனுபவசாலியின் ஆலோசனையை கேட்டு நடப்பது நல்லது. சண்டைகளிலிருந்து விலகியிருங்கள். மனக்குறை தீரும். கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி முன்னேறுவீர்கள்.

**துலாம்**
தனலாபம் கிடைக்கும். மருத்துவச் செலவு ஏற்பட வாய்ப்புண்டு. நண்பருடன் மோதல் வந்து நீங்கும். பொறுமை அதிகரிக்கும். முயற்சிகளால் செயல்கள் முடியும். நீண்ட கால பயம் தீரும்.

**விருட்சிகம்**
பொறுப்பாகப் பணி செய்து சாதகமான பலன் பெறுவீர்கள். வாழ்க்கைத்துணையின் ஆதரவு கூடும். குடும்பம் மகிழும். வெற்றி கூடும். காத்திருந்த விஷயத்துக்கு அனுமதி கிடைக்கும்.

**தனுசு**
பிரச்னைகளைப் புறந்தள்ளி மனதிருப்தியுடன் வெற்றி பெறுவீர்கள். நண்பர்களுடன் பண விஷயத்தில் இருந்த மனஸ்தாபம் நீங்கும். பெண்கள் எதிர்பார்த்த விடயங்கள் தாமதமாகக் கிடைக்கும்.

**மகரம்**
செலவுகளால் சேமிப்பு கரையும். சவால்கள் நீங்கும். எதிரியின் மோதலை கவனமாக கடந்து செல்வீர்கள். எதிர்பார்த்த நல்ல விடயத்துக்கு பச்சை விளக்கு கிடைக்கும்.

**கும்பம்**
உறவினருடன் கடன் பற்றி பேசும்போது கோபப்பட வேண்டாம். அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வதில் சங்கடம் நேரும். பணியாளர்கள் அதிக்க கவனத்துடன் உழைக்க வேண்டும்.

**மீனம்**
உடல்நலம் மேம்படும். தனலாபமும் உண்டாகும். முக்கிய வேலைகளைத் தள்ளிப்போடும் எண்ணம் வரும். பாக்கி ஒன்றை வசூல் செய்வீர்கள். நிலுவைப் பணிகள் முடியும்.

# அம்பாந்தோட்டை விவசாயிகள் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

**கொழும்பு, மார்ச் 12**
**அம்பாந்தோட்டை விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டம் காரணமாக சுமார் 3 மணி நேரம் மாத்தறை- கொழுப்பு பிரதான வீதி முடக்கப்பட்டது.**



யானைகளை பராமரிப்பதற்காக விவசாயக் காணிகளை அரசாங்கம் கபளீகரம் செய்துள்ளதாக அறிந்த விவசாயத்தில் ஈடுபடும் மக்கள் கடந்த 53 தினங்களாக முன்னெடுத்த உணவு தவிர்ப்புப் போராட்டம் அமைச்சர் சமல் ராஜபக்ஷ வழங்கிய உறுதிமொழியை அடுத்து கைவிடப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் அது பூதாகாரமாக வெடித்தது.

அரசாங்கம் தங்களை ஏமாற்றுவதாக குற்றம்சாட்டி மீண்டும் பெண்கள் இருவர் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டதை அடுத்து நேற்று முன்தினம் விவசாயிகள் அம்பலாந்தோட்டை நகரில் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

ஆளும் கட்சியின் தேர்தல் கோட்டையான அம்பாந்தோட்டை, அம்பலாந்தோட்டை போன்ற இடங்களில் அரசுக்காக நேரடியாக சென்று வாக்கு சேகரித்த பிக்குகளும் இணைந்து வீதியை மறித்து போராட்டத்தை முன்னெடுத்தனர். யானைக்கும் மனிதனுக்கும் இடையில் முரண்பாட்டை ஏற்படுத்துவதற் காக இந்த அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டத்தை உடனடியாக நிறுத்தாவிட்டால் அம்பாந்தோட்டை தொடக்கம் கொழும்பு வரை விவசாயிகள் பேரணியாக செல்வர் என்றும் போராட்டத்தில் பங்கேற்றோர் எச்சரித்தனர்.

# சிறையிலிருந்து நேற்று ரஞ்சன் எழுதிய கடிதம்

*கொழும்பு, மார்ச் 12*

சிறைத் தண்டனை அனுபவித்துவரும் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, தனது 58 ஆவது பிறந்த தினமான நேற்று சிறைச்சாலையில் இருந்தவாறு ஊடகங்களுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

அங்குணகொலபெலஸ்ஸ சிறையில் இருந்து எழுதுகிறேன். மார்ச் 11 என்பது விசேட நாள் ஆகும். இன்று (நேற்று) எனக்கு 58 வயது பூர்த்தியாகிறது.

நான்கு சுவர்களுக்குள் அடைபட்ட வாழ்க்கையின் முதலாவது பிறந்த நாளாக இன்றைய நாள் (நேற்று) அமைந்துள்ளது.

கடந்த வருடமும் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து சிறைக்குத் தள்ளினர். எனினும், பிறந்த நாளுக்கு ஒரிரு தினங்களுக்கு முன்னரே விடுதலை செய்யப்பட்டேன்.

'தற்போது நான் சிறையில் இருந்தாலும் என்னை தலைப்பிட்டு வெளியில் பல கதைகள் பேசப்படுகின்றன. எனது விடுதலைக்காக பலர் வெளியில் இருந்து செயல்படுகின்றனர். அவ்வாறு செயற்படுபவர்களுக்கு நான் ஒன்றை கூறுகிறேன். நான் சில நாட்கள் உள்ளே இருக்க வேண்டி இருக்கும். ஆகவே பெரிய எதிர்பார்ப்பு எதனையும் வைத்துகொள்ளவேண்டாம்'.

நான் யாரும் இல்லாத ஒருவன். நான் 60 வயதில் ஓய்வு பெறப்போவதில்லை. 1963 இல் பிறந்த பலரைவிட நான் பலசாலி. ஆகவே, உயிர் இருக்கும் வரை நான் மக்கள் சேவகனாகச் செயற்படுவேன்'.

'என்னால் தொடர்ச்சியாக கடிதம் எழுத முடியாது. வெளியில் வந்தாலும் கையசைக்க விடுகிறார்கள் இல்லை. முடியுமானபோது பின்னர் எழுதுகிறேன். இன்று கொண்டாங்களில் ஈடுபட நினைப்பவர்கள் ஏழைகளுக்கு உதவுங்கள்' என்று குறிப்பிட்டுள்ளார்.

# பொலிஸ் உத்தியோகத்தர் வாகன விபத்தில் மரணம்

*கொழும்பு, மார்ச் 12*

ஹபரண - பொலநறுவை வீதியில் மின்னேரியா பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த பொலிஸ் கான்ஸ்டபிள் பயணித்த மோட்டார் சைக்கிள் இராணுவ வாகனம் ஒன்றுடன் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் இராணுவ வாகனத்தை செலுத்தி வந்த இராணுவ அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் மின்னேரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 60 வயதுக்கு மேற்பட்டோர் தடுப்பூசி ஏற்ற முன்னுரிமை

*கொழும்பு, மார்ச் 12*

நாட்டில் நாளை சனிக்கிழமை முதல் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் பதிவாகும் கொரோனா மரணங்களில் அதிகமானோர் 60 வயதுக்கு மேற்பட்டோர் என்பதால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

60 வயதுக்கு மேற்பட்டவர்கள் வைரஸ் பாதிப்புக்கு பின்னர் மருத்துவமனையில் சேர்க்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறப்பு எண்ணிக்கையை குறைக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது என அவர் கூறினார்.

# 351 பேர் குணமடைவு

*கொழும்பு, மார்ச் 12*

நாட்டில் மேலும் 351 பேர் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர் என தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், கொரோனா தொற்றிலிருந்து மீண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 83ஆயிரத்து 561ஆகப் பதிவாகியுள்ளது.

அத்துடன், இலங்கையில் இது வரையான மொத்த கொரோனா பாதிப்பு 86 ஆயிரத்து 685ஆகப் பதிவாகியுள்ளதுடன் அவர்களில், இன்னும் இரண்டாயிரத்து 609 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, நாட்டில் இது வரை 515 பேர் கொரோனா தொற்றினால் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.கவிலிருந்து விலகியோர் மீளவும் இணைவதற்கு வாய்ப்பு

## செயல்குழு கூடித் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 12

**ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி, ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மீண்டும் கட்சியில் இணைவதற்கான வாய்ப்பை வழங்க ஐ.தே.க தீர்மானித்துள்ளது.**

கட்சியின் செயல்குழு கூடி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்த உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் 44 பேர் ஐ.தே.கவில் இணைந்துள்ளனர் எனவும், 18 பேர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர் எனவும் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைக்கும் வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது.

(அ)



# தடுப்பூசி வழங்கும் மையத்துக்கு பிரதமர் மஹிந்த திடீர் பயணம்

கொழும்பு, மார்ச் 12

கொழும்பு நகரசபைப் பகுதியில் பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கும் திட்டத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அபயராம விகாரைக்கு நேற்று வியாழக்கிழமை சென்றிருந்த அவர், அங்கு ஆயிரத்து 200 பேருக்கு கொரோனா தடுப்பூசி வழங்கும் திட்டத்தை மேற்பார்வை செய்தார்.

இந்தத் திட்டமானது கொழும்பு நகரசபையின் உறுப்பினர்களான கலகம தம்மரன்சி தேரர், வைத்தியர் பிரதீப் காரியவாசம் மற்றும் மனோரி விக்ரமசிங்க ஆகியோரின் வேண்டுகோளுக்கு அமைய செயற்படுத்தப்பட்டது.

இந்த தடுப்பூசி முகாம் கொழும்பு நகரசபையின் பிரதம மருத்துவ அதிகாரி ருவான் விஜயமுனி மற்றும் மருத்துவக் குழுவினரின் பங்குபற்றலில் முன்னெடுக்கப்பட்டது.

இதில், நாரஹேன்பிட்டி அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தேட்டுவே ஆனந்த நாயக்க தேரர், மகா சங்கத்தினர், வைத்தியர்கள், வைத்திய தாதிகள் மற்றும் ஊழியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



# ரஞ்சனை பார்வையாளர் சந்திக்க தடை

கொழும்பு, மார்ச் 12

ரஞ்சன் ராமநாயக்கவை இரண்டு வாரங்களுக்கு பார்வையாளர்கள் சந்திக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணாவுடன் 'செல்பி' எடுத்துக் கொண்ட குற்றச்சாட்டு காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# நகுலேஸ்வரத்தில் நேற்று சிறப்பான தேர்த்திருவிழா



யாழ்ப்பாணம், மார்ச் 12

வரலாற்று சிறப்புமிக்க அருள்மிகு நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர சுவாமியின் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது.

நேற்றுக் காலை அபிசேக ஆராதனைகளும் வசந்த மண்டப பூசைகளும் நடைபெற்று விநாயகர், முருகப்பெருமான் வள்ளி, தெய்வானை சமேதராக எழுந்தருள நகுலேஸ்வரப் பெருமான் எழுந்தருளி மங்கள வாத்தியங்கள் முழங்க தேரேறி வெளி வீதி உலா வந்தார்.

கடந்த மாதம் 26 திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய மகோற்சவத்தில் நேற்று முன்தினம் இரவு திருவிழாவாக சப்பறத் திருவிழாவும் 14 நாளாகிய சிவராத்திரி தினமாகிய நேற்று காலை தேர்த் திருவிழாவும் மாலை சிவராத்திரி விசேட பூசைகளும் நடைபெற்று இன்று கீரிமலை புனித கண்டகி தீர்த்தத்தில் நடைபெறும் தீர்த் தோற்சவத்துடன் கீரிமலை நகுலேஸ்வரர்ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நிறைவடைகிறது.

# புதிய அங்கத்தவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ள சு.க.

கொழும்பு, மார்ச் 12

மாகாண சபை தேர்தலில் போட்டியிட விரும்புவோருக்கு, சிறிலங்கா சுதந்திரக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கும் வகையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இவ்வாறு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

(அ)



# ஹெரோயின் வைத்திருந்தவர் யாழ். நகரில் நேற்று சிக்கினார்

யாழ்ப்பாணம், மார்ச் 12

உயிர்க்கொல்லி போதைப் பொருளான ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். நகரில் வைத்து அவர் நேற்று கைது செய்யப்பட்டார் என்று மாவட்ட போதைப் பொருள் ஒழிப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லியடியைச் சேர்ந்த 34 வயதுடைய சந்தேக நபரிடமிருந்து சுமார் 4 இலட்சம் ரூபா பெறுமதியான 25 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

உப பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான யாழ்ப்பாணம் மாவட்ட போதைப் பொருள் ஒழிப்பு பொலிஸ் பிரிவினரே இந்த கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சந்தேக நபர் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார்.

(அ-03)

# கிளிநொச்சி மணியங்குளத்தில் யானைகளால் தென்னை அழிவு

கிளிநொச்சி, மார்ச் 12

கிளிநொச்சி மாவட்டம் கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கந்தபுரம் மணியங்குளம் கிராமத்துக்குள் யானைகள் புகுந்து ஏற்படுத்திய அழிவினால் நூறு வரையான தென்னை மரங்கள் சேதம் அடைந்துள்ளன.

இந்த அசம்பாவிதம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

ஏற்கனவே வயல் காணிகளுக்குள்ளும் யானைகள் நுழைந்து அழிவுகளை ஏற்படுத்தமுற்பட்டவேளை மக்களால் அவை விரட்டியடிக்கப்பட்டன.

இவ்வாறான நடவடிக்கை தொடர்வதால் யானை வேலிகளை அமைத்து தமது கிராமத்தை யானைகளிலிருந்து பாதுகாப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்புக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வவுனியா சிதம்பரபுரம் மலைப் பிரதேசத்தில் தீ!



வவுனியா, மார்ச் 12

வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் உள்ள மலைப்பகுதியில் ஏற்பட்ட தீ பரவலைக் கட்டுப்படுத்தி அயலில் இருந்த வீடுகளுக்கு தீ செல்லவிடாது வவுனியா நகரசபை தீயணைப்புப் பிரிவினர் தடுத்துள்ளனர்.

நேற்று பிற்பகல் வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் உள்ள மலை பகுதியில் தீ திடீரென பரவியுள்ளது. இதனை அவதானித்த கிராமவாசி ஒருவர் வவுனியா நகரசபை தீயணைப்புப் பிரிவினருக்கு தெரியப்படுத்தியிருந்தார்.

இதனையடுத்து விரைந்து செயல்பட்ட வவுனியா தீயணைப்பு பிரிவினர் மக்கள் குடிமனைக்குள் தீ பரவலடையாது தடுத்ததுடன், மலைப் பகுதியில் ஏற்பட்ட தீ பரம்பலையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

# 30 ஆண்டுகளின் பின் குருந்தூர்மலை பிள்ளையார் ஆலயத்தில் சிவராத்திரி!

முல்லைத்தீவு, மார்ச் 12

**முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு குருந்தூர்மலை அடிவாரத்தில் அமைந்துள்ள சிறிகோணமடு பிள்ளையார் ஆலயத்தில் 30 ஆண்டுகளின் பின்னர் சிவராத்திரி விழாவில் மக்கள் கலந்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்.**



நேற்று காலை குருந்தூர் மலை அடிவாரத்தில் அமைந்துள்ள சிறிகோணமடு பிள்ளையார் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாடுகள் ஆரம்பமாகின.

1990 ஆம் அண்டின் பின்னர் இந்த ஆண்டு சிறிகோணமடு பிள்ளையார் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு இம்முறையே சிவராத்திரி வழிபாடுகள் சிறப்புற நடைபெற்றுள்ளன.

முள்ளியவளை, தண்ணீருற்று, குமுழமுனை கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பலர் வழிபாடுகளில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

சிவராத்திரி விழாவினை முன்னிட்டு அங்கு பொலிஸாரும் படையினரும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

(அ)





# திருக்கேதீஸ்வரத்துக்கு சென்ற இந்தியத் தூதுவர்

மன்னார், மார்ச் 12

வடக்கு மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் நேற்று வியாழக்கிழமை வழிபாடுகளில் ஈடுப்பட்டார்.

326 மில்லியன் ரூபா செலவில் இவ்வாலய புனரமைப்புப் பணிகளை இந்தியா மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்தோடு, பல தசாப்தகாலமாக இலங்கை - இந்தியா இணைப்புப் பாலமாக இருந்த ராமர்சேது பகுதியில் இந்தியத் தூதுவர்விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார்.

ஆயிரம் ஆண்டுகள் பழைமையான தொடர்புகளை உருவாக்குவதில் வரலாற்று கட்டமைப்புக்களின் வகிபாகத்தை நினைவு கூர்ந்த அவர் இந்திய-இலங்கை மக்களின் பிணைப்புக்கள் வலுவடையும் என குறிப்பிட்டார்.

# ஒட்டுசுட்டானில் 26 மாணவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

முல்லைத்தீவு, மார்ச் 12

ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் ராணி அறக்கட்டளை (லண்டன்) நிதி அனுசரணையில் ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவி தனுஷியாவின் தலைமையில் 26 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இலங்கை யுனைற்றட் அமைப்பின் யாழ்ப்பாணம்-கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் நக்கீரன் , முன்னாள் சாவகச்சேரி நகரசபை உறுப்பினரும் ஊடகவியலாளருமான கிஷோர், கிளிநொச்சி மாவட்ட சம்மேளனத் தலைவர் அஜந்தன், ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி இரதீசன் மற்றும் மாணவர்கள், பெற்றோர்கள், சம்மேளன உறுப்பினர்கள், இளைஞர் கழக தலைவர்கள் கலந்து கொண்டனர்.



# பிறந்தநாளில் கத்திக்குத்து: இளம் குடும்பஸ்தர் மரணம்!

## கிளிநொச்சியில் துயரச் சம்பவம்

கிளிநொச்சி, மார்ச் 12

கிளிநொச்சியில் கத்திக் குத்துக்கு இலக்காகிக் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.





கிளிநொச்சி, வட்டக் கச்சி வைத்தியாலைக்கு அண்மித்த பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை ஏழு மணியளவில் இடம்பெற்றது.

குடும்பஸ்தர் ஒருவரை அவரது பிறந்தநாள் தினமான நேற்று முன்தினம் வீட்டு வாசலில் வைத்து இருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கினார் என பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்த சம்பவத்தில் படுகாயமடைந்தவர், கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர், அதே பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான அருளம்பலம் துசியந்தன் (வயது 32) என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இதேவேளை, இந்தக் கொலைச் சம்பவத்தடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை தர்மபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கண்ணிவெடி அகற்றும் தளங்களுக்கு அமெரிக்கப் பிரதித் தூதுவர் பயணம்

கொழும்பு, மார்ச் 12



அபாயகரகரமான வெடிபொருட்கள் அகற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் கடினமானதும் அதி அவதானமுடையதுமான நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்கும் நிலக்கண்ணிவெடி அகற்றலில் ஈடுபடும் பெண்கள் அணியொன்றுடன் உரையாடுவதற்கும் அமெரிக்கப் பிரதித் தூதுவர் மார்ட்டின் கெலி மார்ச் மாதம் 8 ஆம் திகதி வடக்கில் உள்ள நிலக்கண்ணிவெடி அகற்றல் தளமொன்றுக்கு விஜயம் செய்தார்.

இந்த விஜயம் தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

நிலக்கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா இந்த நிதியாண்டில் வழங்கும் 100 கோடி இலங்கை ரூபாவுக்கும் (5.5 மில்லியன் அமெரிக்க டொலர்) அதிகமான தொகையின் பகுதியொன்றாக இருக்கும் இந்த திட்டமானது உள்ளூர்வாசிகளின் பாதுகாப்பை ஊக்குவிக்கிறது.

உயிராபத்தான இந்த சாதனங்களை அகற்றுவதற்கு திறமையும் பொறுமையும் மற்றும் துணிச்சலும் அவசியம் என்று பிரதித் தூதுவர் கெலி தெரிவித்தார்.

தங்களது சமூகங்களை மீளகட்டியெழுப்புவதில் துணிச்சலான சேவையொன்றை மேற்கொள்ளும் அதேநேரம், ஒதுக்கி வைக்கப்பட்ட பாலின பாத்திரங்களின் மாறா நிலைகளை நிலக்கண்ணிவெடி அகற்றலில் ஈடுபடும் இந்த பெண்கள் எதிர்த்து நிற்கின்றனர்.

நிலக்கண்ணிவெடி அற்ற தேசமாக உருவாவதற்கு இலங்கைக்கு உதவுவதற்கான அவர்களது பங்களிப்புக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம் என்றும் அமெரிக்க பிரதித் தூதுவர் மார்ட்டின் கெலி குறிப்பிட்டார்.

கிளிநொச்சியிலுள்ள பிராந்திய நிலக்கண்ணிவெடி நடவடிக்கை அலுவலகத்தில் தேசிய நிலக்கண்ணிவெடி நடவடிக்கை நிலையத்துடன நேர்மறையானதும் ஆக்கப்பூர்வமானதுமான சந்திப்பொன்றையும் அவர் நடத்தினார். நடவடிக்கைகள் மற்றும் உபகரணங்களுக்கு 78 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான தொகையை வழங்கி, இலங்கையில் மனிதாபிமான நிலக்கண்ணிவெடி அகற்றலுக்கான மிகப்பெரிய கொடையாளராக 1995 ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா இருந்து வருகிறது-என்றுள்ளது.

# ஜெனிவா கள நிலைமையை அவதானிக்கின்றது இந்தியா!

## தூதுவர் கோபால் பாக்லே கூறுகிறார்



கொழும்பு, மார்ச் 12

**ஜெனிவாவில் இலங்கை தொடர்பான தீர்மானம் குறித்த விவாதங்கள் இடம்பெறுகின்ற நிலையில் இந்திய தூதுக்குழு அங்குள்ள நிலைமைகளை உன்னிப்பாக கவனித்து வருவதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.**

ஜெனிவா விவகாரம் மற்றும் தமிழ் மக்களின் தீர்வுத் திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்துகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வில் இலங்கை விவகாரம் தொடர்பான விடயங்களிலும் அதன் முன்னேற்றங்கள் குறித்தும் இந்தியா அக்கறையுடன் அவதானத்தில் கொண்டுள்ளது.

இலங்கைப் பிரதிநிதிகளும் தங்களது மதிப்பீட்டை எங்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளனர். எனவே, இந்தியா இந்த விடயத்தில் சரியான முறையில் செயல்படும் .

எவ்வாறாயினும் தெற்காசிய பிராந்திய அமைதி மற்றும் நல்வாழ்வை இந்தியா என்றும் குறித்து நிற்கும். இலங்கை எங்கள் நெருங்கிய நண்பர் மட்டுமல்ல அண்டை நாடும் கூட. அந்த வகையில் இலங்கையின் ஒற்றுமை, ஸ்திரத்தன்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு இந்தியா எப்போதும் உறுதியாக நிற்கும்.

இன நல்லிணக்கத்தை ஊக்குவித்தலை உள்ளடக்கிய அரசியல் கண்ணோட்டத்தின் அடிப்படையில் இலங்கையின் நல்லிணக்க செயல்முறையை பரந்த உள்ளத்துடன் ஆதரிப்போம்.

தமிழர்கள் உட்பட இலங்கையில் அனைத்து சமூகப் பிரிவினரும் சமத்துவம், நீதி, அமைதி மற்றும் கௌரவத்திற்கான அபிலாஷைகளை அடைவது இலங்கைக்கு பலம் அளிக்கும்.

எனவே, அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை செயல்படுத்துவது இலங்கையின் நல்லிணக்கம், அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு உதவுவதோடு நாட்டை பலப்படுத்தவும் உதவும்-என்றார்.



# மஹா சிவராத்திரியை முன்னிட்டு திருக்கேதீஸ்வரத்தில் புகையூட்டல்

மன்னார், மார்ச் 12

மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் நேற்று மாலை ஆரம்பமான மஹாசிவராத்திரி திருவிழாவுக்காக சுகாதாரத் துறையினர் நேற்று அதிகாலை முதல் ஆலயத்தை சூழ்ந்த பகுதிகளில் புகையூட்டும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

மன்னார் மாவட்டத்தில் கொரோனா கொத்தணி உருவாகாமல் இருப்பதற்காக மன்னார் சுகாதாரத்துறையினரின் சுகாதார ஆலோசனைக்கு அமைவாக அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. சுமார் 500 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பாலாவியில் நீராடுவது, தீர்த்தம் எடுப்பதும், அங்காடி வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பன கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சுகாதார துறையினரால் தடை செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தலைமையில் சுகாதார வைத்திய அதிகாரிகள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து திருக்கேதீஸ்வர ஆலய பகுதியில் விசேட சுகாதார நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதுக்குடியிருப்பு பஸ் நிலையத்தை இயங்குநிலைக்கு கொண்டு வருக!

முல்லைத்தீவு, மார்ச் 12

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் காணப்படும் பஸ் நிலையத்தை இயங்குநிலைக்கு கொண்டு வருமாறு மக்கள் மற்றும் குறித்த பஸ் நிலையத்தில் வர்த்தக நிலையங்களை அமைத்து உள்ள வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பஸ் நிலையம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டு பல ஆண்டுகள் சென்றபோதும் இன்றுவரை அந்தப் பகுதிக்கு பஸ்கள் வந்து தரித்து செல்லாத நிலையில் பஸ் நிலையம் வெறிச்சோடி சமூகச் சீர்கேடுகளுக்கு துணைபோகும் இடமாக மாறி வருவதாக பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்

அதுமாத்திரமன்றி முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தினால் பல்வேறு துன்பங்களை அனுபவித்த மாற்றுத்திறனாளிகள் குறித்த பகுதியில் வர்த்தக நிலையங்களை அமைத்து தங்கள் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கோடு காத்திருக்கின்றார்கள். பஸ் நிலையம் இயங்கு நிலைக்கு வராத காரணத்தினால் வர்த்தக நடவடிக்கைகள் தமக்கு சாதகமாக இல்லை எனவும் இதனால் பல்வேறு துன்பங்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மிக விரைவாக குறித்த பஸ் நிலையத்தை இயங்கு நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.





# சுகாதார தொண்டர்கள் வீதி மறியல் போராட்டம்

## யாழில் ஏ-9 வீதியூடான போக்குவரத்து பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் ஏ-9நெடுஞ்சாலையை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்று வியாழக்கிழமை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில், போக்குவரத்தைச் சீர்செய்வதற்காக மாம்பழம் சந்தி, கச்சேரி-நல்லூர் வீதியென மாற்று வழிகளில் பொலிஸார் வாகனங்களை அனுப்பி வைத்தனர்.

தமக்கு வழங்கப்பட்ட நிரந்தர நியமனம் இடைநிறுத்தப்பட்ட நிலையில் அதனை மீளப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்து வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுகாதாரத் தொண்டர்கள் மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக கடந்த முதலாம் திகதி தொடக்கம் தொடர்ச்சியான கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களது போராட்டம் உணவுத் தவிர்ப்புப் போராட்டமாக மாற்றமடைந்து நேற்று மூன்றாவது நாளாகத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையில், நேற்று முற்பகல் அவர்கள் வீதி மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

2019ஆம் ஆண்டு, அப்போதைய ஆளுநர் எடுத்த முயற்சியின் பயனாக வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களுக்கு சுகாதாரப் பணியாளர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டது.

எனினும், இந்த நியமனத்தில் முறைகேடு இடம்பெற்றதாகப் பாதிக்கப்பட்ட சுகாதார தொண்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக அந்த நியமனங்கள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

நிரந்தர நியமனக் கடிதம் பெற்ற சுகாதாரப் பணியாளர்கள் 454 பேரே, தமக்கு உரிய தீர்வை வழங்குமாறு கோரி வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்னால் தொடர்ச்சியான கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வீட்டுத் திட்டங்களுக்கான நிலுவையை வழங்குங்கள்

## பிரதமரிடம் செல்வம் எம்.பி. கோரிக்கை



மன்னார், மார்ச் 12

வடக்கில் தொடங்கப்பட்டு நிறைவடையாத எட்டாத வீட்டுத் திட்டங்களுக்கான நிலுவைத் தொகையை வழங்குமாறு வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பிரதமரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று வியாழக்கிழமை அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்த கடிதத்தில், “முன்னாள் வீடமைப்பு மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் காலப்பகுதியில் மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்டமானது இற்றைவரை பூர்த்தி செய்யப்படவில்லை.

அத்துடன், பயனாளிகளுக்கான மீதமுள்ள கொடுப்பனவும் வழங்கப்படவில்லை. ஏழை மக்கள் தங்கள் சொத்துக்களையும் கையில் வைத்திருந்த சிறிய தொகைப் பணத்தையும் வைத்துத்தான் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் இந்த வேலையை ஆரம்பித்தார்கள்.

ஆனால், ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்திட்ட வேலை நிறைவுக்கு வரவில்லை. ஏழை மக்கள் கடந்த உள்நாட்டுப் போரில் அனைத்தையும் இழந்தவர்கள். இப்பொழுது மிகவும் அவதிப்படுகிறார்கள்.

எனவே, இந்த மக்களுக்கு சுதந்திரமாக வாழவும் பாதிப்புக்களில் இருந்து விடுபடவும் ஒரு வீடு தேவை. இதனால், பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வீட்டுத்திட்டக் குறைகளை நிறைவுக்குக் கொண்டுவருவதற்கும் அவர்களின் அன்றாட வாழ்வை சுமூகமாக நகர்த்திச் செல்வதற்கும் வழிவகுக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்-என்று கூறப்பட்டுள்ளது.

# தமிழக சட்டமன்ற தேர்தல் 2021:

# அ.தி.மு.க. - தே.மு.தி.க. கூட்டணி உடைந்ததன் காரணம் இதுதான்

ஆ. விஜயானந்த்

தே.மு.தி.கவுடன் பேச்சு நடந்து வருவதாக அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் தினகரன் தெரிவித்துள்ளார். தி.மு.க, அ.தி.மு.க அணியில் கதவுகள் மூடப்பட்டுவிட்ட நிலையில், சட்டமன்றத் தேர்தலின் முடிவில் தே.மு.தி.கவின் எதிர்காலம் என்னவாகும்?

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் ஓரிரு வாரங்களே உள்ளன. தேர்தல் பிரசாரத்தில் தீவிரம் காட்ட வேண்டிய கட்சிகள் அனைத்தும் தொகுதிப் பங்கீடு, இழுபறி, உள்கட்சி பூசல் எனப் பலமுனைத் தாக்குதல்களுக்கு ஆளாகி வருகின்றன. மக்களைச் சந்தித்து வாக்குகளைச் சேகரிக்கவே நேரம் இல்லாத நிலையில், சிறிய கட்சிகள் தவித்துக் கொண்டிருக்கின்றன. அ.தி.மு.க சார்பில் போட்டியிடப் போகும் வேட்பாளர்கள் பட்டியல் வெளியாகிவிட்டதால், அந்தத் தொகுதிகளில் பிரசாரங்கள் களைகட்டத் தொடங்கிவிட்டன.

தி.மு.க தரப்பில் இன்னும் ஓரிரு தினங்களில் வேட்பாளர் பட்டியல் வெளியாகும் எனக் கூறப்படுகிறது. அ.ம.மு.க சார்பில் போட்டியிடப் போகும் வேட்பாளர் பட்டியலையும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் தினகரன் வெளியிட்டு வருகிறார். இதற்கிடையில், அ.தி.மு.க அணியில் இருந்து விலகிய தே.மு.தி.கவும் 140 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியலை தயார் நிலையில் வைத்திருக்கிறது. இந்நிலையில், அ.ம.மு.கவுடன் கூட்டணிப் பேச்சு தே.மு.தி.க தலைமை நடத்தி வருகிறது. விரைவில் கூட்டணி குறித்த அறிவிப்பு வெளியாக லாம் எனக் கூறப்படுகிறது.

அதேநேரம், அ.தி.மு.க அமைச்சர்கள் தங்கமணி, வேலுமணி ஆகியோருடன் பலகட்டப் பேச்சுவார்த்தைகள் நடந்ததால், 'எப்படியும் அ.தி.மு.கவுடன் கூட்டணி உறுதியாகிவிடும்' என தே.மு.தி.க தொண்டர்கள் எதிர்பார்த்தனர். இந்நிலையில், கடந்த 9 ஆம் தேதி தே.மு.தி.க தலைமை அலுவலகத்தில் நடந்த மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில், அ.தி.மு.க அணியில் இருந்து விலகுவதாக முடிவெடுக்கப்பட்டது. இப்படியொரு திடீர் முடிவை தொண்டர்கள் எதிர்பார்க்கவில்லை. கூட்டம் முடிந்து வெளியே வந்த தே.மு.தி.க மாநில துணைச்செயலாளர் எல்.கே.சுதீஷ், 'இன்றைக்குத்தான் எங்களுக்கு தீபாவளி. அ.தி.மு.க அனைத்து இடங்களிலும் டெபாசிட் இழக்கும்' எனக் கொதித்தார். இதனைத் தொடர்ந்து விஜயகாந்தின் மகன் விஜய பிரபாகரனும், அ.தி.மு.க தலைமையை கடுமையாக விமர்சித்தார்.

### வேட்பாளர்கள் மனநிலை

கூட்டணிக்கான கதவுகள் அடைக்கப்பட்ட நிலையில், தே.மு.தி.க தனித்துப் போட்டியிட உள்ளதாகத் தகவல் வெளியானது. இதற்கான பட்டியல் சரிபார்ப்பின்போது, கட்சி நிர்வாகிகளைத் தொடர்பு கொண்ட தே.மு.தி.க நிர்வாகிகள், ஹ உங்கள் பெயரை மாவட்ட செயலாளர் பரிந்துரை செய்துள்ளார். 'நீங்கள் போட்டியிடும் முடிவில் உறுதியாக இருக்கிறீர்களா?' எனக் கேட்டு எழுதிக் கொண்டனர். தே.மு.தி.க சார்பில் போட்டியிடப் போகும் வேட்பாளர்களின் மனநிலையை பரிசோதிக்கவே இவ்வாறு கேட்கப்பட்டதாகத் தகவல் வெளியானது. தொடர்ந்து அ.ம.மு.க அமைப்புச் செயலாளர் பழனியப்பன் உள்ளிட்டோருடன் தே.மு.தி.க மாநில துணைச் செயலாளர் பார்த்தசாரதி பேச்சு நடத்தி வருவதாகவும் கூறப்பட்டது.

"அ.தி.மு.க நிர்வாகிகள் அவமானப்படுத்தியதால்தான் அ.தி.மு.க அணியில் இருந்து தே.மு.தி.க வெளியேறியதா?" என அ.தி.மு.கவின் முக்கிய நிர்வாகி ஒருவரிடம் பி.பி.ஸி. தமிழுக்காக பேசினோம். தனது பெயரைக் குறிப்பிட விரும்பாமல் நம்மிடம் பேசிய அவர், "அ.தி.மு.க தலைமையில் உள்ளவர்களைப் பற்றி விஜயகாந்த் குடும்பத்தினர் பேசிய பேச்சுகள்தான் கூட்டணி முறிவுக்குப் பிரதான காரணம். தொடக்கத்தில் இருந்தே அவர்கள் அதிக இடங்களைப் பெறும் முனைப்பில் இருந்தனர். அ.தி.மு.கவுக்கு என சில கணக்குகள் இருக்கின்றன. அதன் அடிப்படையில்தான் இடங்களை ஒதுக்க முடியும். கூட்டணிப் பேச்சு நடந்து கொண்டிருந்த போதே ஆரணியில் சுதீஷ் பேசிய பேச்சின் ஆடியோ ஒன்று முதல்வரிடம் போட்டுக் காட்டப்பட்டது. தே.மு.தி.கவை ஒதுக்குவதற்கு அந்த ஆடியோ ஒன்று மட்டுமே போதுமானதாக இருந்தது" என்கிறார்.

### கூட்டணியை சீண்டிய ஓடியோ

தொடர்ந்து பேசுகையில், "ஆரணியில் நடைபெற்ற தே.மு.தி.க நிர்வாகிகள் கூட்டத்தில் பேசிய எல்.கே.சுதீஷ், '2011 ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் நாம் மட்டும் கூட்டணியில் இல்லா விட்டால் அ.தி.மு.க என்ற கட்சியே இன்றைக்கு இருந்திருக்காது. கூட்டணிக்காக இவர்கள் நம்மிடம் வந்து கெஞ்சினார்கள் எனக் கூறிவிட்டு அ.தி.மு.க தலைமையை கடுமையாக விமர்சனம் செய்து பேசினார். அவர்கள் கட்சியின் உள் அரங்கில் பேசப்பட்டாலும், இதன் ஓடியோ மட்டும் முதல்வரின் பார்வைக்குச் சிலர் கொண்டு வந்துள்ளனர். இதுகுறித்து நேரடியாக சுதீஷிடம் அமைச்சர் ஒருவர் கேட்டுள்ளார். இதற்குப் பதிலளித்தவர், 'எங்கள் தொண்டர்களின் எழுச்சிக்காக உள் அரங்கில் பேசினோம். பொதுவெளியில் நாங்கள் விமர்சனம் செய்யவில்லையே' என விளக்கம் கொடுத்தார். அதன்பிறகு கே.பி.முனுசாமியை விட்டு தே.மு.தி.கவை சங்கடப்படுத்தும் வேலைகள் நடந்தன" என்கிறார்.

மேலும், "ஒருகட்டத்தில் பேச்சில் தொடர்ந்து தாமதம் ஏற்படவே, சுதீஷை நேரடியாக அழைத்துப் பேசினார் முதல்வர். அப்போது, 'நீங்கள் எல்லாம் என்ன கட்சி நடத்துகிறீர்கள். 8 சதவிகித வாக்கு, 10 சதவிகித வாக்கு உள்ளது எனப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் கட்சியில் நான்கு பேரையாவது குறிப்பிட்டுச் சொல்லுங்கள் பார்க்கலாம். எத்தனை பேர் உங்கள் கட்சியில் இருக்கிறார்கள்' எனக் கடுமையாக சத்தம் போட்டுள்ளார். இந்த அவமானத்தை சுதீஷால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை" என்றார் விரிவாக.

இதனைத் தொடர்ந்து தே.மு.தி.க தலைமை அலுவலகத்தில் நடந்த மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் பேசிய சுதீஷ், 'பாராளுமன்றத் தேர்தலிலும் நமக்கு கடைசியாகத்தான் சீட்டுகளை ஒதுக்கினார். இப்போதும் பா.ம.கவை முடித்து விட்டு நம்மிடம் வந்தார்கள். தொடக்கத்தில் இருந்தே சிங்கிள் டிஜிட் என்றதைத் தாண்டி அவர்கள் வெளியே வரவில்லை. அமைச்சர்கள் நேரில் வந்து கேப்டனை பார்த்துவிட்டுச் சென்றனர். அவர்களுடன் 4 முறை பேச்சுவார்த்தை நடந்தது. ராஜ்ய சபா சீட்டை தருகிறோம் என்பதை முதல் நாளே ஒத்துக் கொண்டனர். தொகுதிப் பங்கீட்டில் 23 இடங்களைக் கேட்டோம். அவர்கள் மறுப்பு தெரிவிக்கவே, 18 தொகுதிகள் வரையில் இறங்கி வந்தோம். கடைசியாக 15 தொகுதிகள் கேட்டோம். திடீரென 13 எனக் குறைத்துவிட்டார்கள். இந்தக் கூட்டணியில் ஏராளமான அவமரியாதையை சந்தித்துவிட்டோம். இதற்கு மேலும் நாம் தொடரக் கூடாது என நினைக்கிறேன்," எனப் பேசியுள்ளார். இதனை ஏற்று விலகல் அறிவிப்பை வெளியிட்டனர்.

'சுதீஷ் பேசிய சில வார்த்தை கள்தான் கூட்டணி மோதலுக்குக் காரணம் என்கிறார்களே?' என செங்கல்பட்டு மாவட்ட தே.மு.தி.க செயலாளரும் முன்னாள் எம்.எல்.ஏவுமான அனகை முருகேசனிடம் கேட்டோம். "ஆரணி கூட்டத்தில் சுதீஷ் பேசியவிதம் அ.தி.மு.கவுக்கு சங்கடத்தை உருவாக்கியிருக்கலாம். முதலமைச்சர் அவரிடம் பேசும்போது, 'உங்களுக்கு என்ன வாக்கு வங்கி இருக்கிறது. இவ்வளவு சீட்டுகளைக் கேட்கலாமா?' எனக் கேட்டதும் மனவருத்தத்தை அதிகப்படுத்தி விட்டதாகச் சொல்கிறார்கள். எங்கள் நிர்வாகிகளை கே.பி.முனுசாமியும் சரியான முறையில் நடத்தவில்லை" என்கிறார்.

அ.தி.மு.க மீதான புகார்கள் குறித்து அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் பெங்களூரு புகழேந்தியிடம் பிபிசி தமிழுக்காக பேசினோம். "கூட்டணி குறித்து நல்ல செய்தி வரும் என நினைத் தோம். கூட்டணி வேண்டாம் எனத் தே. மு.தி.க கூறிவிட்டது. பேச்சு தோல் வியில் முடிந்துவிட்டதால் விரக்தியின் விளிம் பில் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார் கள். இரண்டு தரப்புக்கும் பேச்சில் முடிவு எட்டப்படாவிட்டால், இது குறித்து எங்கள் கட்சித் தலைமையின் கவ னத்துக் கொண்டு சென்றிருக்கலாம். அப் படிச் செய்யாமல் அ.தி.மு.க தோற்றுப் போகும் என்றெல்லாம் பேசுவது சரியான தல்ல. எங்களோடு பயணம் செய்வார்கள் என நினைத்தது முடியாமல் போனதில் ஆதங்கம் உள்ளது. அதேநேரம், வார்த்தைகளை வெளியிடும்போது மிகக் கவனமாக இருக்க வேண்டும்" என்றார்.

### பிரேமலதா உணரவில்லை

'அ.தி.மு.க கூட்டணியில் கதவுகள் அடைக்கப்பட்டுவிட்டதால், தே.மு.தி.கவின் நிலை என்னவாகும்?' என மூத்த பத்திரிகையாளர் சாவித்திரி கண்ணனிடம் பேசினோம். "தொடக்கத்தில் இருந்தே அரசியல் கட்சிக்கான முதிர்ச்சியோடு தே.மு.தி.க நடந்து கொள்ளவில்லை. கூட்டணிப் பேச்சு ஏன் தாம தப்படுத்த வேண்டும்?' என வெளிப்படை யாகக் கேட்பது சரியானதல்ல. அவர்களுக் குக் கூடுதல் தொகுதிகள் வேண்டும் என் றால் லாபி செய்திருக்க வேண்டும். தனிப் பட்ட முறையிலும் பேசியிருக்கலாம். ஆனால், பொதுவெளியில் பேசி தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொண்டனர். தங்களின் பலம் என்ன என்பதையும் பலம் குறைந்து விட்டதையும் அவர்கள் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை" என்கிறார்.

தொடர்ந்து பேசுகையில், "பழைய ஜமீன் பரம்பரைகள், தங்களை அவ்வளவு எளிதாக விட்டுக் கொடுக்க மாட்டார்கள். தே.மு.தி.கவின் நிலையும் அப்படித்தான் இருக்கிறது. இவர்களுக்கு களநிலவரத்தை உணர்ந்து ஜனநாயகப் பூர்வமாகக் கட்சியை நடத்தத் தெரியவில்லை. இந்தத் தேர்தலில் கிடைக்கும் முடிவுகள்தான் அவர்களைப் பக்குவப்படுத்தும். 2016 ஆம் ஆண்டு வரையில் விஜயகாந்த் ஓரளவுக்கு நன்றாக இருந்தார். இப்போது அவர் உடல் நலம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கட்சியின் வாக்கு வங்கி என்பது விஜயகாந்துக்கானதுதான். பிரேமலதாவுக்கானது அல்ல. இந்தத் தேர்தலின் முடிவில் தே.மு.தி.கவுக்கு எதிர்காலம் இருக்குமா என்பது கேள்விக்குறி. ஒரு கட்சி உயிர்த்திருப்பதற்கு சில காரணங்கள் தேவை. தி.மு.க என்ற எதிர்ப்பு உள்ளவரை அ.தி.மு.க இருக்கும். அதேபோல்தான் தி.மு. கவுக்கும். எது சரி.. எது தவறு என்ற நிலைப் பாடு இருந்தால் தான் கூட்டம் கூடும். இது போன்ற காரணங் கள் எதுவும் அவர்களிடம் இல்லை" என்கிறார். -

நன்றி:பி.பி.ஸி







# மைத்திரியை சிறையில் அடைத்து ரணிலை தப்ப வைக்கும் ஆணைக்குழுவின் வியூகம் சாத்தியமாகுமா?

## கேள்வி எழுப்புகின்றார் விமல் வீரவன்ஸ!

கொழும்பிலிருந்து நமது செய்தியாளர் சேகு

இஸ்லாமிய அடிப்படைவாதிகளுடன் இணைந்து பயணிக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள் இந்த அரசாங்கத்திலா உள்ளனர்? அவர்களுக்காக உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய சூத்திரதாரிகளை தண்டனையில் இருந்து தப்பிக்க வைக்கும் எண்ணப்பாடு உள்ளதா என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

“இஸ்லாம் தீவிரவாதம்: ஈஸ்டர் கமிஷனுக்கு அப்பால்” என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற மாநாடொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவரது உரையின் விபரம் வருமாறு:

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையான சூத்திரதாரி தொடர்பில் முழுமையாக ஆராய்ந்து அவ்வாறானதொரு தாக்குதல் மீண்டுமொரு முறை இடம் பெறுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுவே தற்போதைய அரசங்கத்தின் மீதான மக்களின் எதிர்பார்ப்பாகும். இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை வெளியானதிலிருந்து மக்களும் அதனையே எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் இடம் பெற்றதனைத் தொடர்ந்து அப்போதைய ஜனாதிபதி ஒரு பிரிவினரிடம் இந்த தாக்குதல்கள் தொடர்பில் செய்ய கூடியவற்றை முன்மொழியுமாறு கூறியிருந்தார். அதன்போது நீதிபதி விஜித் மலல்கொட பிரதானமான சில முன்மொழிவுகளை முன்வைத்திருந்தார். அதில் ஒன்று தான் இந்த தாக்குதலுடன் தொடர்புபட்டவர்களுக்கு தண்டனை சட்டகோவைக்கு அமைவான தண்டனையை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதாகும். மற்றையது தான் குறித்த விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை நியமிக்க வேண்டும் என்பதாகும். அடுத்த முன்மொழிவாக பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட்ட வேண்டும் என்ற விடயமாகும்.

அதற்கமையவே அப்போது தெரிவுக்குழு அமைக்கப்பட்டது. அதில் வழக்கு விசாரணைகளை மேற்கொள்ள ரவூப் ஹக்கீம் இருந்தார். அவருக்கு மேலதிகமாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மலித் ஜெயத்திலக தலைமையில் இந்த தெரிவுக்குழு அமைக்கப்பட்டது. அதன் அறிக்கையும் வெளியிடப்பட்டது. அதற்கமைய விஜித் மலல்கொட கூறிய இரண்டு விடங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதாவது, தண்டனை சட்டம் செயற்படுத்தப்படுகின்றது. தெரிவுக்குழு அறிக்கையும் வெளியாகியுள்ளது. இந்நிலையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் கூறப்பட்ட இரண்டு வியடங்கள் நிறைவடைந்துள்ளன. இருப்பினும் கூட தண்டனை சட்டம் உரிய வகையில் செயற்படுத்தபடவில்லை. அதுவே தற்போதைய பிரச்னையாகவுள்ளது. இந்த தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டியது அவசியமானவிடயமாகும். அத்துடன், குறிப்பிட்ட கால எல்லைக்குள் நீதி கிடைக்கப் பெறாத பட்சத்தில் சமூகம் சந்தேகமாக பார்க்கும் நிலைமை ஏற்படும். இது குண்டுத்தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்களுக்கே சாதகமான விடயமாக அமையும்.

மேலும் குற்வாளிகளுக்கு தண்டனை சட்டத்திற்கு அமைய தண்டனை கொடுப்பதை தவிர மாற்று வழி இல்லை என ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்திருக்கின்றது. ஆகவே தண்டனை சட்டத்தின் ஊடாக நீதியை பெற்றுக் கொடுக்க முடியும். இந்த தாக்குதலின் பின்னணியில் உள்ள அனைவருக்கும் தண்டனை கிடைக்க பெற வேண்டியது அவசியமான விடயமாகும்.

இந்நிலையில் ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரகாரம் சஹ்ரான், கலகொட அத்தே ஞானசார தேரரின் காரணமாகவே உருவாகியுள்ளதாக கூறப்படுகின்றது. அவ்வாறென்றால் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பும் ஞானசார தேரரினாலா உருவாகியுள்ளது? இஸ்லாமிய தீவிரவாதமென்பது உலகில் உருவானதொன்றாகும். பௌத்த தீவிரவாதமென்பது இங்கு இல்லை. அப்படி இருந்து இருந்தால் 6ஆயிரம் வாள்கள் கொண்டுவரப்படும் நிலைமை ஏற்பட்டிருக்குமா? எப்படி அவ்வளவு தொகை வாள்கள் கொண்டு வரப்பட்டன.

ஞானசார தேரர் தொடர்பான விவகாரம் அவ்வாறே இருக்க ரிசாத் பதி யுதீனுடைய சகோதரர் சஹ்ரானுக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியுள்ளார் என நாம் கூற வில்லை. மாறாக பொலிஸ் ஊடகப் பேச் சாளரே கூறினார்.

இது தொடர் பில் கர்தினாலும் பொலிசாருக்கு கூறியிருந்தார்.

இது தொடர்பில் ரிசாத் பதியுர்தீனுடைய சகோதரர் கைது செய்யப்பட்டதாக கூறுகின்றனர். வியாபார நடவடிக்கை தொடர்பில்உரையாடுவதற்காகவே தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தினார்களாம். ஆனால் குற்ற செயல் ஒன்றை முன்னெடுப்பது தொடர்பான உரையாடலே இடம் பெற்றதாக கர்தினாலிடம் கூறுகின்றனர். பின்னர் பிணை கிடைக்கப்பெற்ற போது வியாபார நிமிர்த்தம் மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி அழைப்பு என கூறுகின்றனர்.

இந்நிலையில் ரிசாத்திற்கும் அவருடைய சகோதரரிற்கும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் கீழ் வழக்கு தொடருமாறு கூறுகின்றனர். ஆனால், ஞானசார தேரருக்கு சிவில் சட்டத்திற்கு அமைய தண்டனை வழங்க வேண்டும் என பரிந்தரைக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் ஞானசார தேரரே சிறைக்கு செல்லவுள்ளார். பதியுதீன் இல்லை. பௌத்த தீவிரவாதத்தின் காரணமாகவே இஸ்லாமிய தீவிரவாதம் உருவானதாக ஆணைக்குழு கூறுகின்றது. அன்று தமிழ் பிரிவினைவாதம் ஏற்பட்ட போதும் இனபிரிவினை தொடர்பான பிரச்னையின் நிமிர்த்தமே எல்.ரீ.ரீ.ஈ அமைப்பு உருவானதாக கூறினர்.

சஹ்ரான்தொடர்பில் ஆராயும்போது எதற்காக ஆணைக்குழு விகாரைகளின் பக்கம் செல்கின்றது. வாள்கள் எவ்வாறு வந்தது என்பது தொடர்பில் ஆராய்வதற்கே செல்ல வேண்டும். பௌத்த தேரர்களை எவராயினும் தாக்க முடியும். மாறாக பௌத்த தேரர்கள் கூறிய அப்துல் ராசிக் தொடர்பில் ஆராய ஆணைக்குழுவிற்கு முடியவில்லை.

சஹ்ரானுடன் குறித்த நபர் இருந்துள்ளார். அத்துடன், தீவிரவாதிகளை விடுவிக்குமாறு கூறிய ரிசாத் போன்றவர்களுக்கு ஆணைக்குழு எதுவும் கூறவில்லை. அதேபோல் காத்தான்குடி பிரதேசத்திலிருந்தே தீவிரவாதம் ஆரம்பித்ததாக ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் அது தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அறிக்கையில் எதுவும் குறிப்படப்படவில்லை.

ஆணைக்குழு சஹ்ரானின் விம்பமா என தோன்றுகின்றது. முஸ்லிம் கவுன்சிலின் தலைவர் அமீன் தீவிரவாதத்தை பரப்பிய நபராவார். தீவிரவாதத்தை பாடசாலை புத்தகத்தினுள்ளும் புகுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். அதேபோன்று ஆசிரியர் கையேடுகளிலும் அத்தகைய விடயங்களை அவர் உட்புகுத்தியிருந்தார். இத்தகைய நபரை என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பிலான தெளிவான விளக்கம் ஆணைக்குழுவின் அறிக்கையில் இல்லை.

அரச பலத்தை பெறுவதும், நிலத்தை ஆக்கிரமிப்பதுமே தீவிரவாதத்தின் முதல் நோக்கமாகும். இந்நிலையில் பாடசாலை புத்தகங்கள் ஆசிரியர் கையேடுகளில் தீவிரவாதக் கருத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஆணைக்குழு ஆராயவில்லை என்பது பாரிய பிரச்னையாகும். இஸ்லாமிய தீவிரவாதமென்பது பயங்கரவாத்தின் ஒரு பகுதியாகும். அத்துடன், அரசாங்கத்தினுள்ளும் இஸ்லாமிய தீவிரவாதத்தை போசிக்கும் நோக்கம் உடையவர்கள் உள்ளனர். இவர்கள் தான் குறித்த விவகாரத்தில் தண்டனை பெற வேண்டியவர்களை காப்பாற்ற முற்படுகின்றனர்.

ரிசாத் பதியுதீன் 10 வருடங்கள் கைத்தொழில் அமைச்சராக ஆயிரக்கணக்கான சிங்கள வியாபாரிகளை பாதாளத்திற்குள் தள்ளியுள்ளார். அந்த வகையில் சிங்கள வியாபாரி ஒருவர் என்னை சந்தித்து பல விடயடங்களை தெரிவித்திருந்தார். அவற்றில் முஸ்லீம் வியாபாரியொருவர் சதோசா நிறுவனத்திற்கு பொருட்களை வழங்கியிருந்தால் அவர்களுக்கு உடனடியாக நிதி கிடைக்கப்பெறும் எனவும் சிங்கள வியாபாரிகள் பொருளை வழங்கியிருந்தால் அவர்களுக்கான நிதி கிடைக்கப்பெறுவதில் காலதாமதம் ஏற்படும் எனவும் கூறியிருந்தார். இதன் காரணமாக வியாபாரத்தில் நட்டம் ஏற்படும் நிலைமைகள் தமக்கு ஏற்பட்டதாகவும் கூறியிருந்தார்.

> “உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டியது அவசியம், அத்துடன், குறிப்பிட்ட கால எல்லைக்குள் நீதி கிடைக்கப்பெறாத பட்சத்தில் சமூகம் சந்தேகமாக பார்க்கும் நிலைமை ஏற்படும். இது குண்டுத் தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்களுக்கே சாதகமான விடயமாக அமையும்.”

அத்துடன், இந்த ஆணைக்குழுவின் ஊடாக தண்டனை கிடைக்கப்பெறாத நபர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே. அவர் தான் இதில் மகிழ்ச்சி அடைகின்றார். ரணிலே நிறைவேற்று அதிகாரத்தின் அதிகளவிலான அதிகாரத்தை அவருக்கு கீழ் வைத்திருந்தார். அவர்தான் புலனாய்வு பிரிவில் செயற்பட்டு வந்த கிரிதலே இராணுவ முகாமை சீல் வைத்தார். அந்த முகாமின் ஊடாக இஸ்லாமிய இனவாதம் மற்றும் சஹ்ரான் தொடர்பான விடயங்கள் சேகரிக்கப்பட்டிருந்தன.

இதனை ரணிலே மேற்கொண்டிருந்தார். ஆனால் அவர் மீது விரல் நீட்டும் அளவிற்கேனும் முறைப்பாடுகள் இல்லை. அப்பொழுது சம்மி குமார, டீ.கே.பீ. தசநாயக்க ஆகிய இராணுவ அதிகாரிகளை கைது செய்தனர். இவ்வாறாக புலனாய்வு அதிகாரிகளை கைது செய்து சிறையில் அடைத்தமையினால், அதனை பார்த்துக்கொண்டிருக்கும் ஏனைய அதிகாரிகளின் மனநிலை எவ்வாறு காணப்படும். அத்தகைய நிலைப்பாட்டை ஏற்படுத்தியது ரணில் விக்கிரமசிங்கவில் ஆட்சிக்காலத்திலேயே ஆகும்.

அந்த காலத்தில் நிர்வாகசபை என்ற ஒன்று இருந்தது. அதில் ரணவக்க, அனுர திசாநாயக்க ஆகியோரே இருந்தனர். அவர்களே இராணுவ புலனாய்வு அதிகாரிளை சிதைவடைய செய்தவர்கள். முன்னாள் ஜனாதிபதி சிறிசேனவிற்கு மாத்திரம் தண்டனை சட்ட கோவைக்கு அமைய தண்டனையை வழங்கி இந்த விடயத்தை கைகழுவி விட எவராலும் முடியாது. மாறாக முழு நிர்வாகத்தையும் சிறையில் அடைக்க வேண்டும்.

ஈழநாடு



# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**12**

**01C. குறித்த உருவை துண்டுகளாக்கிய பின்னர் அவற்றை மீளப் பொருத்துவதற்கு பொருத்தமான உருக்களை தெரிவு செய்தல்.**

**2012 32**

செவ்வகத்தை துண்டுகளாக்கிய பின்னர் அவற்றை மீளப் பொருத்துவதற்கு பொருத்தமான உருக்களை தெரிவு செய்தல். செவ்வகம் என்பது நீள்பக்கம் (4)குறுகலான பக்கம்(2) அடிப்பகுதி (1) என்பதனால் உருவாக்கப்படலாம். இதனைப் பிரதிபலிக்கும்

விடை 01

**2019 15**

குறித்த உருவில் துண்டினைப் வெட்டிப் பின்னர் அதனை மீளப் பொருத்துவதற்கு பொருத்தமான உருக்களை தெரிவு செய்தலின்போது உருவில் தடித்த மெல்லிய கோடுகளைக் கவனியுங்கள். 03 ஆவதில் குறுக்குக்கோடு தடிப்பாக உள்ளது. நிலைக்குத்துக் கோட்டில்வலப்புறமாக உள்ளது தடிப்பாக இருக்க வேண்டும்.அவ்வாறில்லை. 02 ஆவதில் நிலைக்குத்துக் கோட்டில்வலப்புறமாக உள்ளது தடிப்பாக இருக்க வேண்டும். இங்கு இடப்புறக் கோடு மெல்லியதாக இருக்க வேண்டும். ஆனால் தடிப்பாக உள்ளது எனவே சரியான

விடை 01

01D. குறித்த உரு தொடர்பாக தரப்பட்ட விவரணத்தை சரியாக விளக்கும் விடையை தெரிவு செய்தல் அல்லது அக் கோலத்திற்கு அடுத்த உருவைக் கண்டறிதல் அல்லது கூடுகளினுள்ளே இடப்பட்டுள்ள கோலத்திற்கேற்ப வெற்றுக் கூட்டிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்தல்.

**2009 09**

வெட்டி அகற்றப்பட்ட துண்டினை மீளப்பொருத்துவதற்கு அது உரிய கோலத்துடன் ஒத்துப் போக வேண்டும். கறுப்பு பொட்டுகளை அகற்றுவதே இக் கோல ஏற்பாடாகும். இச்சதுரப் பெட்டியில் மூன்று நிரல்கள் உள்ளன. முதலாவது நிலைக்குத்து நிரலின் கீழ் நோக்கி முதலில் ஒரு கறுப்பு பொட்டும் அடுத்து ஒரு கறுப்புப் பொட்டும் நீக்கப்படுகிறது. மூன்றாவது நிரலிலும் அவ்வாறே நிகழுகிறது. எனவே இரண்டாவது நிரலிலும் இறுதியில் இரு வெள்ளைப் பொட்டுகளும் ஒரு கறுப்புப் பொட்டுமிருக்கும்

விடை 03

**2009 10**

வெட்டி அகற்றப்பட்ட துண்டினை மீளப்பொருத்துவதற்கு அது உரிய கோலத்துடன் ஒத்துப் போக வேண்டும். கறுப்பு பொட்டுகளை அகற்றுவதே இக் கோல ஏற்பாடாகும். இச்சதுரப் பெட்டியில் இரு பொட்டுகளில் ஒன்று கறுப்புப் பொட்டு மற்றையது வெள்ளைப் பொட்டு. மூன்று நிரல்கள் உள்ளன இங்கு முதலாவது நிரலிலும் இரண்டாவது பெட்டியில் கறுப்பு வெளளைப் பொட்டுகள் மேற்புறமாக உள்ளது. இனி கறுப்பு வெள்ளைப் பொட்டுகள் கீழ்புறமாக ஒரு வெள்ளைப் பொட்டும் ஒரு கறுப்புப் பொட்டுமிருக்கும்

விடை 02

**2010 03**

குறித்த உரு தொடர்பாக தரப்பட்ட விவரணத்தை சரியாக விளக்கும் விடையை தெரிவு செய்தல். இங்கு முதலாவது பெட்டியில் அன்னாசி புத்தகம் பந்து ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றவை. மூன்றாவது பெட்டியில் யானை மரம் வாகனம் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றவை. இரண்டாவது பெட்டியிலுள்ளவை வாத்தியக் கருவிகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை.

விடை 02

**2010 04**

குறித்த உரு தொடர்பாக தரப்பட்ட விவரணத்தை சரியாக விளக்கும் விடையை தெரிவு செய்தல். இங்கு மூன்றாவது பெட்டியில் வாளி கத்தரிக்கோல் கோப்பை ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றவை. இரண்டாவது பெட்டியில் மண்கோலி திறப்பு பேனை ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றவை முதலாவது பெட்டியிலுள்ளவை தளபாடங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை.

விடை01

**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

# ‘ஹிட்லரின் போக்கில் கோட்டா அரசாங்கம்’

## துஷார இந்துநில் எம்.பி. கருத்து

**கொழும்பு, மார்ச்.12**

**‘ஹிட்லர் படிப்படியாக பாராளுமன்றத்தை பலவீனமடையச் செய்து, இறுதியில் சர்வாதிகார ஆட்சியை முன்னெடுத்ததைப் போன்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமும் செயல்படுகிறது. அரசாங்கத்தின் மோசடிகள் எதிர்த்தரப்பினரால் வெளிப்படுத்தப்படும் என்ற அச்சத்தில் பாராளுமன்ற அமர்வு தினங்களும் நேரமும் சூட்சுமமான முறையில் குறைக்கப்பட்டுள்ளன’ என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துநில் குற்றம்சாட்டினார்.**



கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் மோசடிகள் தொடர்பில் வெளிப்படுத்துவதற்கு எமக்குள்ள ஒரே களம் பாராளுமன்றமாகும். ஆனால், தற்போது மிகவும் சூட்சுமமான முறையில் பாராளுமன்றம் கூடும் நேரம் குறைக்கப்பட்டுள்ளதுடன் பாராளுமன்ற அமர்வுக்கான தினங்கள் குறைக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றத்தைக் கூட்டுவதை ஆளுந்தரப்பினர் விரும்பவில்லை. இயன்றவரை பாராளுமன்றத்தைக் கூட்டாமலிருப்பதையே இவர்கள் விரும்புகின்றனர்.

கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு எமக்குள்ள களத்தை இவர்கள் இல்லாமலாக்குகின்றனர். எமக்கு மாத்திரமல்ல. பாராளுமன்ற செய்தியாளர்களுக்கும் இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊழியர்கள், அதிகாரிகள், பாதுகாப்பு பிரிவினர் உள்ளிட்ட சகலருக்கும் பாராளுமன்றத்திற்கு வருகைதர அனுமதியளிக்க முடியுமெனில் ஏன் ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் அனுமதியளிக்க முடியாது ? ஊடகவியலாளர்கள் அனைவரும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்களா?

பாராளுமன்றத்தில் பேசப்படும் விடயங்கள் அரசாங்கத்துக்கு பாதகத்தை ஏற்படுத்தும் என்பதை அரசாங்கம் அறியும். இவற்றை மக்களுக்கு கொண்டு செல்லக் கூடாது என்பதற்காகவே ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்களின் உரிமைகளும் மீறப்பட்டுள்ளன. - என்றார். (எ)

# எதிர்வரும் மூன்று வாரங்களுக்குள் பல்கலைகளை திறக்க நடவடிக்கை

*கொழும்பு, மார்ச்.12*

நாட்டிலுள்ள அனைத்து தேசிய பல்கலைக்கழகங்களையும் எதிர்வரும் மூன்று வாரங்களுக்குள் மீண்டும் திறப்பதற்கு எதிர்பார்த்துள்ளாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சுகாதார அதிகாரிகளிடம் அனுமதி கோரியுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க குறிப்பிட்டார்.

இவ்வாறு திறக்கப்படும் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஏப்ரல் மாதம் முதல் கொரோனா தடுப்பூசிகளை செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (எ)

# எரிந்த காரொன்றிலிருந்து வர்த்தகரின் சடலம் மீட்பு

*கொழும்பு, மார்ச்.12*



கொஹூவல, ஆசிரிமாவத்தையில் எரிந்த காரொன்றிலிருந்து சடலம் ஒன்று நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்டது என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் காரும், சடலமும் எரிந்து தீக்கிரையாகியுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட நபர் களுபோவிலவிலுள்ள பாத்தியா மாவத்தையில் வசித்த 33 வயது வர்த்தகரெனவும் இந்த நபர் இரவு உணவுக்காக சென்றதாகவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கொஹூவல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# ஒருங்கிணைப்புக் கூட்டங்களுக்கு எம்மை யாரும் அழைப்பதில்லை!

## வவுனியா விவசாய சம்மேளனம் குற்றச்சாட்டு

வவுனியா, மார்ச்.12

வவுனியாவில் இடம்பெறும் பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு விவசாயத் துறைசார்ந்த பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை என மாவட்ட விவசாய சம்மேளனத்தின் தலைவர் சேதுகாவலர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்: 'வவுனியாவில் பிரதேசமட்டங்களில் இடம்பெறும் அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் விவசாயப் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்படாமையால் அவர்கள் சார்ந்த பல்வேறு பிரச்னைகளை வெளிப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியாவை பொறுத்தவரை விவசாய செய்கையை பிரதானமாகக் கொண்ட மக்களே அதிகம் வாழ்கின்றனர். அதேபோன்று அந்தத் துறைசார்ந்த பிரச்னைகளும் இங்கு ஏராளம் உள்ளன.

குளங்கள் தொடர்பில் பல்வேறு பிரச்னைகள் உள்ளன. எனவே அவற்றை வெளிப்படுத்தி அதற்கான தீர்வுகளை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் எமக்கு ஏற்படுத்தித்தரப்படவேண்டும்.

இம்முறை வவுனியா பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு மாத்திரமே எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. செட்டிக்குளம், நெடுங்கேணியில் இடம்பெற்ற பிரதேசமட்ட கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இதன் தொடர்ச்சியாக மாவட்ட மட்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்களுக்கும் அழைப்பு விடுக்கப்படாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி, விவசாயிகளின் பிரச்னைகளை வெளிப்படுத்தி அதனைத் தீர்ப்பதற்கு மாவட்ட விவசாய சம்மேளனத்திற்கோ அல்லது விவசாயிகள் சார்ந்த பிரதிநிதிகளுக்கோ அபிவிருத்திக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தரவேண்டும்.' எனக் குறிப்பிட்டுள்ளார். (எ)

# அசோக அபேசிங்கவிடம் சி.ஐ.டி. வாக்குமூலம் பதிவு

கொழும்பு, மார்ச்.12



உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் அசோக் அபேசிங்க கூறிய கருத்துக்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று அவரிடமிருந்து ஒரு வாக்குமூலத்தைப் பதிவுசெய்தனர்.

நேற்றுக் காலை கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவில் ஆஜரான நிலையிலேயே அவரிடமிருந்து வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது.

இதுதொடர்பில் அறிக்கை பதிவுசெய்ய கடந்த திங்களன்றும் அதற்கு மறுநாளும் ஆஜராகுமாறு அசோக் அபேசிங்கவுக்கு சி.ஐ.டியினர் அழைப்பாணை அனுப்பியிருந்தனர். எனினும் பாராளுமன்ற அமர்வுகள் காரணமாக அவர் ஆஜராகவில்லை. உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் தொடர்புபட்டுள்ளனர் என அசோக் அபேசிங்க, அண்மையில் தெரிவித்த கருத்து தொடர்பில், பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் செய்த முறைப்பாட்டுக்கு அமையவே சி.ஐ.டியினர் இந்த விசாரணைகளை மேற்கொண்டனர். (எ)

# மக்களுடன் இணைந்து விரைவில் போராட்டம்!

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர் அரசாங்கம் மீது கடும் அதிருப்தி

கொழும்பு, மார்ச்.12



இந்த அரசாங்கம் தொடர்பில் மக்கள் வினவும் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குறுகிய காலத்தில் மக்களின் வெறுப்பை அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ளது. ஆகவே, விரைவில் மக்களுடன் இணைந்து போராட வேண்டிய நிலை ஏற்படும். அரச தலைவர்கள் தவறுகளைத் திருத்தி ஆட்சியதிகாரத்தை முன்னெடுப்பது அவசியமாகும் என அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

அபயராம விகாரையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

அரசாங்கத்தின் ஒரு சில செயல்பாடுகள் வெறுக்கத்தக்கதாக காணப்படுகிறது. அமைச்சுக்களின் செயலாளர்கள் உரிய காரணமின்றி இடமாற்றம் செய்யப்படுகின்றமை அரசியல் அழுத்தங்களை அடிப்படையாகக்கொண்டதாகக் காணப்படுகிறது.

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முன்னின்று செயல்பட்ட எம்மிடம் மக்கள் கேள்வி கேட்கிறார்கள். மக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாத நிலை காணப்படுகிறது. குறுகிய காலத்தில் அரசாங்கம் மக்களின் வெறுப்பை பெற்றுக்கொண்டுள்ளது என்றே குறிப்பிட வேண்டும்.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை ஆட்சிக்கு கொண்டுவர முன்னின்று செயல்பட்டுள்ளோம். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் இடம்பெறும் ஒரு சில செயல்பாடுகளைப் பார்த்து மௌனம் காப்பது பொருத்தமற்றதாகும். உரிய தீர்மானத்தை சிறந்த முறையில் எடுக்க வேண்டும்.

அரசாங்கம் தவறுகளைத் திருத்திக்கொண்டு செயல்பட வேண்டும். இல்லாவிடின் நாட்டு மக்களுடன் ஒன்றிணைந்து அரசாங்கத்துக்கு எதிராகப் போராட வேண்டிய நிலை ஏற்படும். அரசாங்கத்தின் குறைகளைச் சுட்டிக்காட்டி அரச தலைவர்களை நல்வழிப்படுத்தும் பொறுப்பு மதத் தலைவர்களுக்கு உண்டு- என்றார். (எ)



மலர்வு :- 07.06.1943
உதிர்வு : - 10.03.2021

# மரண அறிவித்தல்

## அமரர் நாகநாதர் சிவஞானம் (ராசா)

### (ஓய்வு பெற்ற CTB காப்பாளர்)

யாழ்ப்பாணம் ஏழாலைமேற்கு, புளியங்கிணத்தடி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் இல.76/60, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் (மிலேனியம் விருந்தினர் விடுதி) கொண்ட திரு. நாகநாதர் சிவஞானம் (ராசா) அவர்கள் (10.03.2021) புதன்கிழமை அன்று காலமானார் என்ற செய்தியை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம். அன்னார் காலஞ்சென்ற நாகநாதர் பாறுப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும் காலஞ்சென்ற நல்லதம்பி ஞானாம்பிகையின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பவளக்கொடியின் அன்புக் கணவரும்,காலஞ்சென்ற சீவரத்தினம், கனகமணி, காலஞ்சென்ற சிவலிங்கம், சிவானந்தன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்றவர்களான ஞானம்மா, சரஸ்வதி, கந்தசாமி மற்றும் சாந்தகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, தங்கேஸ்வரி, மகாராசா, நாகேஸ்வரி, சிவபாதசுந்தரம் ஆகியோரின்அன்பு மைத்துனரும் சாந்தரூபன், சாந்தினி (மிலேனியம் விருந்தினர் விடுதி), ஜெயரூபன் (லண்டன்), ஜெயந்தினி (கனடா), சிவரூபன் (லண்டன்), கஜரூபன் (லண்டன் வுாரசமய நுழிழசவள) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயகௌரி, சுகுமாரன் மிலேனியம் விருந்தினர் விடுதி), எழிலரசி (லண்டன்), அருட்செல்வன் (கனடா), மிதுனாலினி (லண்டன்), மடோனா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் விஸ்னுஜா, துஸ்ஜா, சானுகா, வனோஜ், நிவேஸ், மானஸ்வி, கரிகாலன், பவன்னா, அஷ்சயா, அகல்யா, சாயுரி, நிவேதி, சேயுஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (12.03.2021) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் இராமநாதன் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுபின்னர் ஏழாலையில் அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக பூதவுடல் வைக்கப்பட்டு ஏழாலை மேற்கு உசத்தியோடை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**மிலேனியம் விருந்தினர் விடுதி.**
**077 601 6310, 077 243 1310,**
**021 222 5876**

**தகவல்: குடும்பத்தினர்**
**சாந்தரூபன் குடும்பம், சுகுமாரன் சாந்தினி குடும்பம், ஜெயரூபன் குடும்பம், அருட்செல்வன் ஜெயந்தினி குடும்பம், சிவரூபன் குடும்பம், கஜரூபன் குடும்பம்.**



## மீன் போன்ற உடலுடன் பிறந்த குழந்தை மரணம்!

ஹைதராபாத், மார்ச் 12

இந்தியாவின் ஹைதராபாத் நகரின் மருத்துவமனை ஒன்றில் மீன் போன்ற உடலமைப்புடன் ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை 2 மணித்தியாலங்கள் மட்டுமே உயிர் வாழ்ந்தது.

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 7 மணிக்கு இந்தக் குழந்தை பிறந்தது. ஆனால், பிறந்த இரண்டு மணி நேரத்தில், குழந்தைக்கு பல உடல்நலப் பிரச்சனைகள் ஏற்பட்டன. இதனால் அந்தக் குழந்தை உயிரிழந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இதனை அறிவியல்பூர்வமாக, "சிரெனோமேலியா" என்று அழைக்கின்றனர். அதாவது, முதுகெலும்பும், குழந்தையின் கால் எலும்புகளும் தனித்தனியாகப் பிரியாமல் ஒன்றாகவே இணைந்து உருவாவதால் ஏற்படும் பிரச்சனை.

இதற்கு முன்பு, இதுபோன்ற பிரச்னையை எதிர்கொண்டதில்லை என்பதால், இது மிகவும் சிக்கலாக மாறியதாகவும் மருத்துவமனை கண்காணிப்பாளர் கூறினார். (ஐ)

# போராட்டக்காரர்களை எதிரிகளைபோல மியன்மார் இராணுவம் கையாள்கின்றது!

### சர்வதேச மன்னிப்பு சபை விசனம்

யங்கூன், மார்ச் 12

"போர் களத்தில் மட்டும் பயன்படுத்தப் பொருத்தமான ஆயுதங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது மியன்மார் இராணுவம் பிரயோகிக்கிறது. எதிரிகளைப் போன்று அவர்களை கையாள்கின்றது" என்று சர்வதேச மன்னிப்பு சபை விசனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், மியன்மார் இராணுவம் எதிர்ப்பாளர்கள் மீது எந்த அறிவிப்பும் இன்றித் தாக்குதல்கள் நடத்துகின்றது. இது ஒரு சட்டவிரோத மரண தண்டனை என்றும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

பெப்வரி முதலாம் திகதி முதல் ஆட்சிக் கவிழ்ப்பை எதிர்த்துப் போராட்டம் நடத்துவோர் மீது நடத்தப்படும் ஒடுக்குமுறைகள் தொடர்பில் 55இற்கும் மேற்பட்ட காணொலிகளை மன்னிப்பு சபையும், மனித உரிமைகள் அமைப்புகளும் பார்த்துள்ளன.

அதில், "ராட்மடௌ" என்று அழைக்கப்படும் மியன்மாரின் துருப்புக்கள் போர் களத்திற்கு பொருத்தமான ஆயுதங்களை மட்டுமே ஏந்தியுள்ளன.

தலைநகர் யங்கூனில் நடந்த போராட்டத்தில் தப்பியோடும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறது. இதில் 7 பேர் மரணமாகினர். உள்ளூர் ஊடகங்களும் இதனை உறுப்படுத்தின.



இதேபோன்று தலைநகரில் நடந்த போராட்டம் ஒன்றில் எதிர்ப்பாளர் ஒருவர் மீது தீயை அணைக்கும் வாயுவைப் பிரயோகிக்கின்றனர். அவர் வீதியில் விழுகிறார். உயிரற்ற அந்த உடலை பல நிமிடங்களின் பின்னர் இராணுவத்தினர் இழுத்துச் செல்கின்றனர்.

இவ்வாறான கொலைகள் பல நடந்துள்ளன. இது போன்ற சட்டவிரோத மரண தண்டனைகள் பல மியன்மாரில் அரங்கேறுகின்றன என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதனிடையே, இராணுவத்தின் அடக்குமுறைகளை மீறி, நேற்று வியாழக்கிழமையும் அந்நாட்டின் பல பகுதிகளிலும் போராட்டங்கள் இடம்பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிரான்ஸில் இந்த வாரம் முதலாவது விண்வெளிப் பாதுகாப்பு ஒத்திகை!

பாரிஸ், மார்ச் 12

பிரான்ஸின் முதலாவது விண்வெளிப் பாதுகாப்பு இராணுவ ஒத்திகை இந்த வாரம் நடைபெற்று வருகிறது. கடந்த திங்களன்று ஆரம்பமான ஒத்திகையின் இறுதி நாளான இன்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மக்ரோன் அதனை நேரில் பார்வையிடவுள்ளார். இதற்காக துளூஸில் உள்ள விண்வெளிப் பயிற்சிக் கற்கைகள் நிலையத்துக்கு அவர் விஜயம் செய்கிறார்.

விண்வெளி இராணுவ ஒத்திகைக்கு அஸ்ரர் எக்ஸ் - 2021 எனப் பெயரிடப்பட்டுள்ளது. அஸ்ரர் எக்ஸ் என்பது 1965 இல் பிரான்ஸ் விண்வெளிக்கு அனுப்பிய முதலாவது செய்மதியின் பெயர் ஆகும். பிரான்ஸ் அதன் செய்மதிகளைப் பாதுகாப்பதற்கு எடுக்கின்ற முதலாவது பயிற்சி நடவடிக்கை மட்டுமன்றி ஐரோப்பாவில் நடக்கின்ற முதலாவது விண்வெளிப் பாதுகாப்பு இராணுவ ஒத்திகையும் இதுவே ஆகும்.

ஜேர்மனியின் விண்வெளி நிலைவர நிலையம் அமெரிக்காவின் விண்வெளிப் படை ஆகியனவும் ஒத்திகையில் இந்த பங்கெடுக்கின்றன.

சமீப காலமாக பிரான்ஸ் தனது விண்வெளிப் பாதுகாப்புத் தந்திரோபாயம் தொடர்பாக மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. 2017இல் பிரான்ஸ் - இத்தாலி



கூட்டு இராணுவத் தொலைத்தொடர்பு செய்மதியை ரஷ்யாவின் உளவு செய்மதி ஒன்று நெருங்க முற்பட்டது எனக் கூறப்படுகிறது. இதுபோன்ற சம்பவங்கள் விண்வெளியின் பாதுகாப்பு மீது தீவிர கவனம் செலுத்த வேண்டிய அவசியத்தை உருவாக்கி உள்ளன.

பிரான்ஸ் முப்படைகளுக்கு மேலதிகமாக தனது விண்வெளிப் படைப்பிரிவை அண்மையில் நிறுவி இருந்தது. துளூஸ் பிராந்தியத்தில் கட்டளை மையத்தைக் கொண்டு அந்தப் புதிய படைப்பிரிவு இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நிலவில் ஆய்வு நிலையம்! சீனா - ரஷ்யா ஒப்பந்தம்

பீஜிங், மார்ச் 12

புவியின் உபகோளான சந்திரன் குறித்து ஆய்வு செய்தற்காக ஒரு நிலையத்தை அமைப்பதற்கு சீனாவும் ரஷ்யாவும் ஒப்பந்தம் ஒன்றை செய்துள்ளன.

இது தொடர்பில் சீன தேசிய விண்வெளி நிர்வாக அமைப்பு வெளியிட்ட அறிக்கையில்,

"சந்திரன் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள சர்வதேச ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் சீனா - ரஷ்யா இடையே செவ்வாய்க்கிழமை கைச்சாத்தானது.

சந்திரனின் மேற்பரப்பில் அல்லது அதன் சுற்றுவட்டப் பாதையில் இந்த ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படவுள்ளது. நிலவு சார்ந்த அனைத்து ஆய்வுகளையும் இங்கு மேற்கொள்ள முடியும். ஏனைய நாடுகளும் இந்த ஆராய்ச்சி நிலையத்தை பயன்படுத்த முடியும். ஆராய்ச்சி நிலையத்தை அமைப்பது குறித்த ஆலோசனை, கட்டுமானம் உள்ளிட்டவற்றில் சீனாவும் ரஷ்யாவும் பரஸ்பரம் ஒத்துழைத்து செயல்படும். விண்வெளியை அமைதி சார்ந்த விவகாரங்களுக்காகப் பயன்படுத்துவதற்கு இரு நாடுகளும் உறுதியேற்றுள்ளன' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த ஆராய்ச்சி நிலையம் எந்த ஆண்டு முதல் செயல்பாட்டுக்கு வரும் என்பது குறித்த தகவல்களை சீனா வெளியிடவில்லை. (ஐ)

## உய்குர் முஸ்லிம்களை இன அழிப்பு செய்கின்றது சீனா!

### அமெரிக்க நிபுணர் குழு சாடல்

வாஷிங்டன், மார்ச் 12

"உய்குர் முஸ்லிம்களுக்கு எதிரான இன அழிப்பில் சீனா ஈடுபட்டுள்ளது. இதற்குப் போதிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன", என்று அமெரிக்க நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

சீனாவில் ஜின்ஜியாங் மாகாணத்தின் மேற்குப் பகுதியில் உய்குர் மொழி பேசும் முஸ்லிம்கள் உள்ளிட்ட பல்வேறு சிறுபான்மை மக்கள் வசிக்கின்றனர். சீனாவின் மற்ற மாநிலங்களில் குழந்தைப் பிறப்பு கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இந்த மாகாணத்தில் மட்டும் கட்டுக்குள் வரவில்லை.

இதனால், கடந்த சில ஆண்டுகளாக முஸ்லிம்கள், சிறுபான்மை பிரிவினர் இடையே குழந்தை பேற்றைத் தடுக்க அத்துமீறும் செயல்களில் சீன அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர் என்று அசோசியேட் பிரஸ் (ஏ.பி.) செய்தி நிறுவனம் நடத்திய கள ஆய்வில் தெரியவந்தது.

இது தொடர்பான செய்தியை ஜூலை மாதம் வெளியிட்டது. இந்த நிலையில் அமெரிக்க நிபுணர் குழுவும் இத்தகைய குற்றச்சாட்டை வைத்துள்ளது.

# ஆர்ஜென்ரீனாவில் காட்டு தீ: 7 பேர் காயம்: 15 பேர் மாயம்!

றியோடிஜெனிரோ, மார்ச் 12

ஆர்ஜென்ரீனாவின் பற்ற கோனியா பிராந்தியத்தில் ஏற்பட்ட காட்டுத் தீயில் சிக்கி ஏழு பேர் காயமடைந்தனர். மேலும் 15 பேர் காணாமல் போயுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தீஸ் மலைத்தொடருக்கு அருகிலுள்ள சுற்றுலாவுக்கு பிரசித்தமான இந்தப் பகுதியில், நேற்றுமுன்தினம் ஏற்பட்ட காட்டுத் தீயால் 100 வீடுகள் சேதமடைந்தன. அத்துடன், அந்தப் பகுதியில் சிக்கியிருந்த சுமார் 200 பேர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

"இந்தக் காட்டுத் தீ இயற்கையாக ஏற்பட்டதாக நான் கருதவில்லை. வேண்டுமென்றே தீவைக்கப்பட்டுள்ளது. இதனுடன் தொடர்புடையவர்களை கண்டறிந்து தண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று ஆர்ஜென்ரீனாவின் சுற்றுச்சூழல் அமைச்சர் ஜுவான் கபாண்டி தெரிவித்துள்ளார்.



இந்தத் தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் 2 ஹெலிகொப்டர்கள், 3 தீயணைப்பு விமானங்கள், 12 தீயணைப்பு இயந்திரங்கள் மற்றும் ஆதரவு வாகனங்களுடன் தீயணைப்பு வீரர்களும் இந்தப் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று ஜனாதிபதி அல்பர்டோ பெர்னாண்டஸ் ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு ஆர்ஜென்ரீனாவில் ஏற்பட்ட தீ விபத்தில் பல்லாயிரக்கணக்கான ஹெக்ரெயர் காடுகள் அழிந்து நாசமானமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



ஜாம்பவான்களின் ரி - 20

## தரங்க அதிரடி ஆட்டம்: இலங்கை அணி வெற்றி!

*ராஜ்பூர், மார்ச் 12*

அதிரடியில் உபுல் தரங்க கலக்க, பங்களாதேஷ் ஜாம்பவான் அணியை 42 ஓட்டங்களால் வெற்றி கொண்டது இலங்கை ஜாம்பவான் அணி.

வீதிப் பாதுகாப்பை வலியுறுத்தி உலக முன்னாள் ஜாம்பவான்கள் பங்கேற்கும் இருபது - 20 தொடர் இந்தியாவின் ராஜ்பூரில் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் இரவு நடந்த ஆட்டத்தில், திலகரட்ண டில்ஷான் தலைமையிலான இலங்கை, முஹமட் ரபீக் தலைமையிலான பங்களாதேஷ் ஜாம்பவான் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்களை இழந்து 180 ஓட்டங்களை எடுத்தது. அதிரடி தொடக்கம் கொடுத்த உபுல் தரங்க 47 பந்துகளில் 5 சிக்ஸர்கள், 11 பௌண்டரிகள் அடங்கலாக 99 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். தவிர, டில்ஷான் 23 பந்துகளில் 6 பெண்ட்ரிகளுடன் 33, சாமர சில்வா 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

181 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் ஜாம்பவான் அணி, 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்களை இழந்து 138 ஓட்டங்களையே பெற்றது. 42 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

அந்த அணியின் சார்பில், நஜிமுதீன் 41 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகள் அடங்கலாக 54 ஓட்டங்களையும், மெஹ்ராப் ஹூசைன் 27 ஓட்டங்களையும், கலீத் மஷூத் 28 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சில், திலகரட்ண டில்ஷான் 3 விக்கெட்களையும், தம்மிக பிரசாத் 2 விக்கெட்களையும், ரஷல் ஆரனோல்ட் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (ஐ)




முதல் ஒருநாள் போட்டி:


# மேற்கிந்தியத் தீவுகளிடம் மண்டியிட்டது இலங்கை

*அன்டிகுவா, மார்ச் 12*

ஷாய் ஹோப்பின் சதம் கை கொடுக்க இலங்கை அணியை 8 விக்கெட்களால் வீழ்த்தியது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் சென்றுள்ளது இலங்கை அணி. முதல் நடந்த இருபது - 20 தொடரில் 1 - 2 என்ற கணக்கில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி பெற்றது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரவு முதலாவது ஒருநாள் போட்டியில் இரு அணிகளும் விளையாடின. அன்டிகுவாவில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.




தொடக்கம் கொடுத்த தனுஷ்க குணதிலக - திமுத் கருணாரத்ன இணை அபாரமான ஆரம்பத்தை ஏற்படுத்தினர். 105 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்ற போது கருணாரத்ன பொலாட்டின் பந்தில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவர் 4 பௌண்ட்ரிகளுடன் 52 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

குணதிலகவுடன் பதும் நிஷாங்க சேர்ந்தார். இந்த நிலையில், குணதிலக சர்ச்சைக்குரிய விதத்தில் 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பொலார்ட்டின் பந்தை குணதிலக தட்டியபோது எதிர்முனையில் இருந்த நிஷங்க ஓட்டம் எடுப்பதற்காக அழைத்தார். பந்தைக் கடந்து ஓட்டம் எடுக்க முயன்ற குணதிலக, அது முடியாது என்பதால் மீண்டும் தனது கிரீஸை நோக்கி ஓடினார். அச்சமயம் பந்தை எடுக்க பொலார்ட் ஓடிவந்து கொண்டிருந்த நிலையில், குணதிலகவின் கால் தெரியாமல் பந்தைத் தட்டியது. இதனால், ஏமாற்றமடைந்த பொலார்ட் நடுவரிடம், களத்தடுப்புக்கு இது இடையூறு என்று முறைப்பாடு செய்தார். இதனால், மூன்றாவது நடுவர் குணதிலகவுக்கு ஆட்டமிழப்பு வழங்கினார்.

இதன் பின்னர் வந்த வீரர்கள் சோபிக்காத நிலையில், அறிமுக வீரரான அசென் பண்டார மட்டும் தனது முதல் அரைச்சதத்தைப் பெற்றார். 49 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்த இலங்கை அணி 232 ஓட்டங்களைப் பெற்றது.

மேற்கிந்தியத்தீவுகளின் பந்துவீச்சில் ஜசன் ஹோல்டர், ஜசன் மொஹமட் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும், பொலார்ட், அலன், ஜோசேப் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகளுக்கு எவின் லெவிஸ், ஷாய் ஹோப் ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர். இருவரும் சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தினர். லெவின்ஸ் 65 ஓட்டங்களைப் பெற, மறுமுனையில் ஆடிய ஹோப் 12 பௌண்ட்ரிகள் ஒரு சிக்ஸருடன் 110 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார்.

47 ஓவர்களில் 2 விக்கெட்களை மட்டும் இழந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி 236 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

டரன் பிராவோ 37 ஓட்டங்களையும், ஜசோன் மொஹமட் 13 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

இலங்கையின் சார்பில் பந்துவீசிய வீழ்த்தப்பட்ட இரு விக்கெட்களையும் துஷ்மந்த சாமிர வீழ்த்தினார். (ஐ)

ஐ.சி.சி. தரவரிசை:

## 7ஆவது இடத்திற்கு பந்த் முன்னேற்றம்!

*டுபாய், மார்ச் 12*

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையை வெளியிட்டுள்ளது. இதில், இந்திய வீரரான ரிஷப் பந்த் 7ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்டில் சதம் விளாசியமையாலேயே அவர், 7 இடங்கள் முன்னேறி தற்போதைய இடத்தைப் பிடித்துள்ளார். அந்த இடத்தை அவர் சக இந்திய வீரரான ரோஹித் சர்மா, நியூஸிலாந்தின் ஹென்றி நிக்கோலஸ் ஆகியோருடன் பகிர்ந்துள்ளார். மூவருமே 747 புள்ளிகளுடன் 7ஆவது இடத்தில் உள்ளனர். (ஐ)

## டுபாய் ஓப்பன் ரென்னிஸ்: காலிறுதியில் சபலென்கா!

*டுபாய், மார்ச் 12*

டுபாய் ரென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு பெலாரசின் சபலென்கா முன்னேறினார்.

டுபாயில் பெண்களுக்கான டபிள்யூ. ரி. ஏ. ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் பெலாரசின் சபலென்கா, எஸ்தோனியாவின் கொன்டாவெயிற்றை சந்தித்தார்.

முதல் செற்றை சபலென்கா 6:3 என வசப்படுத்தினார். தொடர்ந்து அசத்தியவர் அடுத்த செற்றையும் 6:2 என கைப்பற்றினார். முடிவில் சபலென்கா 6:3, 6:2 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் செக் குடியரசின் கரோலினா பிலிஸ்கோவா, அமெரிக்காவின் ஜெசிக்காவிடம் 0:6, 2:6 என்ற நேர் செற்களில் எளிதாக வீழ்ந்தார். பெல்ஜியத்தின் மெர்டென்ஸ், பிரான்ஸின் கரோலின் கார்சியாவை 6:4, 6:2 என வென்று காலிறுதிக்குள் நுழைந்தார். (ஐ)

## பெங்களூர் அணிக்கு புதிய வீரர் தெரிவு!

*பெங்களூர், மார்ச் 12*

நியூஸிலாந்து அணியின் விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான பின் அலனை பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி தெரிவு செய்துள்ளது.

14ஆவது ஐ.பி.எல். இருபது - 20 போட்டி எதிர்வரும் ஏப்ரல் 9ஆம் திகதி இந்தியாவில் ஆரம்பமா கின்றது.



இந்நிலையில், விராட் கோலி தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்கு விளையாடிய அவுஸ்திரேலிய அணியின் ஜோஷ் பிலிப்பே, தனிப்பட்ட காரணங்களால் போட்டியிலிருந்து விலகியுள் ளார்.

இதையடுத்து அவரைப் போன்று, விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான பின் அலனை அந்த அணி தெரிவு செய்துள்ளது.

அண்மையில் நியூஸிலாந்தில் நடந்த உள்ளூர் போட்டி ஒன்றில் அலன் 512 ஓட்டங்களை குவித்தார். இதில் 25 சிக்ஸர்கள் அடக்கம். இதையடுத்து நியூஸிலாந்து அணிக்கு தெரிவானார். ஆனாலும், அவர் இன்னமும் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சஜித் வெளியிட்ட கருத்துக்கும் ஐ.தே.கவுக்கும் தொடர்பில்லை

## பாலித ரங்கே பண்டார நிராகரிப்பு



கொழும்பு, மார்ச் 12

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் சம்பவம் தொடர்பான பொறுப்புக்களை ஏற்றுக்கொள்கின்றோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருந்தால், அது அவரது தனிப்பட்ட கருத்தாகும். அந்தக் கருத்துக்கும் எமக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலின் பின்னர், நாட்டின் தலைவர் வெளிநாடு சென்றிருந்த சந்தர்ப்பத்திலும் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அப்போதைய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன ஆகியோர் விரைந்து செயல்பட்டிருந்ததுடன், அதற்கமைய தாக்குதலின் பின்னர் இடம்பெறவிருந்த பாரிய பாதிப்புக்களைத் தடுக்க நடவடிக்கை எடுத்தனர்.

சம்பவதினத்தன்று இரவு 9 மணியாகும் போது குண்டுதாரிகள் தொடர்பிலும் அவர்களின் அணிதொடர்பிலும் பொலிஸார் விவரங்களை பெற்றுக்கொண்டு, மீண்டுமொரு தாக்குதல் இடம்பெறாதவகையில் அவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுத்திருந்தனர். அதனால் ஐக்கிய தேசியக் கட்சி பொறுப்புடன் செயல்படவில்லை என்று கூறமுடியாது.

அப்போது நாட்டின் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவே பதவி வகித்தார். அவரே பாதுகாப்பு அமைச்சராகவும் செயல்பட்டார். அதனால் இந்தத் தாக்குதல் சம்பவத்தை தடுப்பதற்கான பொறுப்பு அவரையே சார்ந்துள்ளது. எனினும் தாக்குதல் இடம்பெற்று 2 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் இன்னமும், தற்கொலைதாரிகளுக்கான உதவி ஒத்தாசைகளை வழங்கியவர்கள் தொடர்பிலும், பயங்கரவாதி சஹ்ரானுக்கு அரச அனுசரணையுடன் ஊதியம் வழங்கியவர்கள் தொடர்பிலும் மற்றும் வெளிநாட்டுக்கு தப்பிச்சென்றதாகக் கூறப்படும் நபர்கள் தொடர்பிலும் எந்தத் தகவல்களும் சேகரிக்கப்படவில்லை.

ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை நடத்திய போதிலும், அதிலும் முக்கிய தகவல்கள் எதுவும் இல்லை. இந்நிலையில் இது தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் கையளித்திருந்தால், தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரது விவரங்களையும் அறிந்து கொண்டிருக்க முடியும்.

பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க, உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலுடன் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு தொடர்புள்ளதாக தெரிவித்திருந்தால் , அதற்கான சாட்சிகள் அவரிடம் இருந்திருக்கலாம். அதன் காரணமாகவே அவர் அவ்வாறு தெரிவித்திருக்கலாம். ஆனால் அவர் அதனை உரிய தரப்பினரிடமே தெரிவித்திருக்க வேண்டும். தன்னிடமுள்ள ஆதாரங்களை காண்பித்து உரிய தரப்பினரிடம் அதனை அவர் கையளித்திருந்தால், அதில் சிக்கல் ஏற்பட்டிருக்காது.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தாக்குதலின் பொறுப்பை தான் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்திருந்தால் அது அவரதும், ஐக்கிய மக்கள் சக்தியினதும் கருத்தாகும். அந்தக் கருத்து ஒருபோதும் ஐக்கிய தேசியக் கட்சியுடையதாக அமையாது- என்றார். (எ)

# எமது அரசாங்கத்தில் கத்தோலிக்க மக்களுக்கு நீதி பெற்றுக்கொடுப்போம்

## சபையில் கூறினார் சரத் பொன்சேகா



கொழும்பு, மார்ச் 12

**எமது அரசாங்கம் அமைக்கப்படும்போது உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்போம். அதேபோன்று இந்தத் தாக்குதல் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் தேடுவோம் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கையில் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் தொடர்பில் எந்தத் தகவலும் இல்லை என்ற குற்றச்சாட்டு தெரிவிக்கப்படுகின்றது.

அவர்கள் மீது குற்றம்சுமத்திப் பயனில்லை. விசாரணைக் குழுவால் பயங்கரவாதிகளைக் கண்டுபிடிக்க முடியாது. அதுதொடர்பான அனுபவம் அவர்களுக்கு இல்லை. தாக்குதலைத் தடுக்கத் தவறியவர்களையே அவர்கள் பெயரிட்டிருக்கின்றனர்.

ஆனால், அரசாங்கம் ஆணைக்குழு அமைத்து தனது பொறுப்பிலிருந்து விலகிச் செயல்பட்டிருக்கின்றது. ஆணைக்குழு அமைத்து அரசாங்கம் நாடகம் ஒன்றையே மேற்கொண்டுள்ளது.

அதேபோன்று இந்தத் தாக்குதல் தொடர்பில் பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைத்து அறிக்கை சமர்ப்பித்திருக்கின்றோம். பாராளுமன்றத் தெரிவுக்குழு ஊடாக 50 சாட்சியாளர்களிடம் விசாரணை மேற்கொண்டிருக்கின்றோம்.

ஆனால், ஜனாதிபதி ஆணைக்குழு 450 பேர்வரையானவர்களிடம் சாட்சியம் பதிவு செய்திருக்கின்றது. ஆனால், இரண்டு அறிக்கைகளுக்குமிடையில் பாரிய வித்தியாசம் இல்லை.

மேலும், கடந்த அரசாங்கத்தில் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அரசாங்கத்துடன் தான் இருக்கின்றார். மைத்திரிபால சிறிசேன பாதுகாப்பு அமைச்சராக இருந்து மேற்கொண்ட தவறை அந்த அரசாங்கத்தில் இருந்த அனைத்து அமைச்சர்களும் பொறுப்புக் கூறவேண்டியதில்லை.

அத்துடன் தாக்குதலால் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதாகத் தெரிவித்து அதிகாரத்துக்கு வந்த அரசாங்கம், தற்போது பௌத்த சிங்கள மக்களையும் மறந்து கத்தோலிக்க மக்களையும் மறந்து செயல்படுகின்றது.

அதனால், அடுத்த தேர்தலில் பௌத்த சிங்கள மக்களின் வாக்குகள் கிடைக்காது என அரசாங்கத்துக்குள் பேசப்படுகின்றது. அதனால் சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியுமான வேட்பாளரை போட்டியிட செய்யவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதனால், எமது அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும்போது பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம். அதேபோன்று தாக்குதல் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் தேடுவோம். சிங்கள பௌத்த மக்கள் உட்பட நாட்டு மக்கள் அனைவரதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம்- என்றார். (எ)

# மத்திய கிழக்கிலுள்ள இலங்கையர்களை புத்தாண்டுக்கு முன்னர் அழைத்து வரவும்

கொழும்பு, மார்ச்.12

மத்திய கிழக்கு நாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்தியுள்ளது.

அவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக தேசிய விமான சேவையைப் பயன்படுத்த முடியும் என அந்தக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வெளிநாட்டு தூதுவர் காரியாலயங்களில் சேவையாற்றிய தேசிய நலன்புரி அதிகாரிகளை நாட்டுக்கு அழைத்ததன் காரணமாக வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் பல்வேறுபட்ட இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக அனுமதிப்பத்திரம் உடைய வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவன சங்கம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளுக்கு சென்றுள்ள இலங்கையர்களை மீள நாட்டுக்கு அழைக்கும் செயல்பாட்டிற்கு தொழில் அமைச்சர் இடையூறு ஏற்படுத்தி வருவதாக அந்த சங்கத்தின் செயலாளர் எம்.எஸ்.எம் ஹர்சாட் தெரிவித்துள்ளார். (எ)

# மாத்தளை சோமுவிற்கு தமிழக அரசின் விருது!



அவுஸ்திரேலியாவில் வாழும் இலங்கையின் மலையக எழுத்தாளர் மாத்தளை சோமு எழுதிய 'பாலி முதல் மியன்மார் வரை' என்ற பயண நூலுக்கு தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி அமைச்சு, சிறந்த பயண இலக்கிய நூலுக்கான பரிசை வழங்கியுள்ளது.

இவர் ஏற்கனவே 'மாத்தளை முதல் மலேசியாவரை' 'லண்டன் முதல் கனடாவரை' 'சிட்னி முதல் நோர்வேவரை' ஆகிய பயண நூல்களை எழுதியுள்ளார்.

இதுவரை சிறுகதை, நாவல், மொழிபெயர்ப்பு, ஆய்வுக்கட்டுரை, திருக்குறளுக்கு அறிவியல் உரை என பல்வேறு தலைப்புகளில் 25 நூல்களை எழுதி வெளியிட்டுள்ள இவரின் 9 நூல்களுக்கு பல்வேறு விருதுகள் கிடைத்துள்ளன. நாவலுக்கு, இலங்கை சாகித்திய மண்டல விருதுபெற்ற இவரின் 'கண்டிச்சீமை' என்ற நாவலுக்கு தமிழக அரசின்கீழ் இயங்கும் மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் சிறந்த நாவல் பரிசை வழங்கியுள்ளது.

'வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்' என்ற இவரின் நூலுக்கு கொழும்பு தமிழ்ச் சங்கம் 2005இல் மிகச் சிறந்த நூல் பரிசினை வழங்கியது. அந்த நூலுக்கு திருச்சி தூயவளனார் கல்லூரி, 'அறிவியல் தமிழ் எழுத்தாளர்' என்ற விருதை வழங்கி கௌரவித்தது. பல்வேறு விருதுகளையும், தமிழ் ஆய்வாளர்களின் பாராட்டுதல்களைப் பெற்ற மாத்தளை சோமு, தற்போது சங்க இலக்கியங்களை ஆய்வுசெய்து, பாமரர்களும் அறியும் முகமாக 'வியக்கவைக்கும் தமிழர் சிந்தனைகள்' என்ற நூலையும், கடாரம் வென்ற இராஜேந்திரசோழன் தொடர்பான ஒரு நாவலையும் வெளியிடவுள்ளார்.

இவரது 'எல்லை தாண்டா அகதிகள்' சிங்கள மொழியிலும், 'கண்டிச்சீமை' ஆங்கில மொழியிலும் விரைவில் வெளிவர இருக்கின்றன.

**பணியாளர் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் இலத்திரனியல்சார் இயந்திரவியல் தொழில்நுட்ப சேவையினை வழங்கும் முன்னணி நிறுவனம் ஒன்றிற்கு

**தொழிநுட்பவியலாளர்கள் (ஆண்கள்),**
**கணனி தரவேற்றுநர் (பெண்)**
வயதெல்லை 18-25 வேண்டப்படுகின்றனர்.

**தொழில்நுட்பவியலாளர்கள்:**
இலத்திரனியல், இயந்திரவியல் துறையில் ஆர்வமும் விரைவான செயற்திறனும் நேர்மையும் கடமையுணர்வும் நற்பண்புகளும் இருத்தல் வேண்டும். முன்னனுபவம் தேவையில்லை.

**கணனி தரவேற்றுநர் :**
கணனி சார் அறிவும், தமிழ், ஆங்கிலம் தட்டச்சு வேலை தெரிந்திருத்தலும் விரும்பத்தக்கது. அத்துடன் நேர்மையும், கடமையுணர்வும் நற்பண்புகளும் இருத்தல் வேண்டும்.

**தொடர்புகளுக்கு : 077 361 1041**

ஈழநாடு



## இதுவும் நடந்தது!

இரண்டுபேரை அழைத்துவந்து இவர்கள்தான் இராணுவ வாகனச் சாரதிகள், இவர்கள் கூறுவதைக் கேளுங்கள் என்று அப்போதைய சுகாதார அமைச்சராக இருந்த ராஜித சேனரத்ன கூறியதை மறந்திருக்கமாட்டீர்கள்.

'இராணுவம் தாம் கைதுசெய்தவர்களை சுட்டுக்கொன்றுவிட்டு, சடலங்களை குளத்தில் உள்ள முதலைகளுக்கு இரையாகப் போட்டது. இவ்வாறு பல நூறு சடலங்கள் குளத்துக்குள் வீசப்பட்டன. நாங்கள் அப்போது இராணுவத்தினரின் அந்த வாகனங்களுக்கு சாரதிகளாக இருந்தோம்.'

இதுதான் அந்த இருவரும் வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலம். இந்த இருவரையும் ஊடகவியலாளர்கள் முன் கொண்டுவந்து இந்த 'உண்மை'யை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தவர் ராஜித சேனரத்ன என்ற பலம்வாய்ந்த அமைச்சர்.

ராஜித சேனரத்ன இயல்பாகவே இனவாதம் பேசாதவர். அரசியலில் ஆரம்பநாட்களில் தமிழ் அரசியல்வாதிகளுடனும் நெருக்கமாக இருந்தவர்.

அது சோடிக்கப்பட்ட ஒன்று என்பதற்கு அப்பால், இராணுவம் தாம் கைது செய்பவர்களை சுட்டுக்கொன்றுவிட்டு குளத்தில் வீசியது என்றால் அது தமிழர்களைத்தான் குறிக்கிறது என்பது தெரிந்த சங்கதிதான். தேர்தல் காலத்தில் தமிழ் மக்களின் வாக்குகள் தமக்குத்தான் கிடைக்கும் என்பதை நன்கு அறிந்துவைத்திருந்த ராஜித, ஏன் இந்த விடயத்தை சொன்னார் என்பது அவருக்கு மாத்திரம்தான் வெளிச்சம்.

அதுவல்ல இங்கே கவனத்திற்குரியது.

இரண்டு பேர் மிகப்பெரிய மனிதப் படுகொலைகள் நடந்தது என்றும் தாமும் அதில் சம்பந்தப்பட்டிருப்பதாக கூறிய பின்னர், பொறுப்புள்ள அமைச்சர் என்னசெய்திருக்க வேண்டும்? முதலில் அவர்களை அழைத்துச் சென்று பொலிஸாரிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். அவர்களின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் விசாரணை செய்யுமாறு பொலிஸாருக்கு பணித்திருக்கவேண்டும்.

ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. மாறாக அதனை தனது எதிரணியினருக்கு சேறுபூசும் வகையில் ஊடகவியலாளர் மாநாடு நடத்தினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை நேற்று முன்தினம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் மீது விவாதமும் நடந்துவருகின்றது. இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர்கள் சிலரின் பேச்சுக்களை கேட்டபோது இந்தச் சம்மபவம்தான் ஞாபகத்திற்கு வருகின்றது.

ஈஸ்டர் தாக்குதலின் முக்கிய தாக்குதல்தாரியான சஹ்ரான் என்பவருடன் ஹக்கீமுக்கு நெருக்கமான தொடர்பு இருந்தது என்கிறார் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே. ரிஷாத் பதியூதீனுக்கு தொடர்பு இருந்தது என்கிறார் இன்னுமொரு முக்கிய அமைச்சர் விமல் வீரவன்ஸ.

சஹ்ரான் தேடப்படும் குற்றவாளியாகுவதற்கு முன்னர் அவர் ஒரு சமயப்பிரசங்கி. சமூகத்தில் பகிரங்கமாகவே பல கூட்டங்களை நடத்தியவர். அவரது கூட்டங்களுக்கு ஏராளமானவர்கள் சென்று வந்திருப்பார்கள். அவர்கள் எல்லோரும் சஹ்ரானுடன் தொடர்புகொண்டிருந்தவர்கள்தான்.

ஆனால், அவர் ஒரு தேடப்படும் குற்றவாளியாக ஆகிய பின்னர் அவருடன் யாராவது தொடர்புகொண்டிருந்தார்கள் என்றால் அதுதொடர்பாக பாராளுமன்றத்திலும் வெளியிலும் பேசிக்கொண்டிருப்பதை விடுத்து தகுந்த ஆதராங்களுடன் பொலிஸாரை அணுகுவதுதான் பொருத்தமானது. அதைவிடுத்து ராஜித பாணியில் ஊடக மாநாடு நடத்துவதல்ல.

**- ஊர்க்குருவி.**

# வட, கிழக்கு இராணுவ மயமாக்கப்படுவதை மனித உரிமைகள் பேரவை ஆதரிக்கிறதா?

## பேரவை அமர்வில் இணையவழி உரையாற்றிய சுரேஷ் கேள்வி

**ஜெனிவா, மார்ச் 12**

**'இலங்கை அரசால் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இராணுமயமாக்குவதை இந்தப் பேரவை ஆதரிப்பதாக தெரிகிறது."**

**இவ்வாறு கூறியிருக்கின்றார் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன்.**

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத் தொடரில் இணைய வழியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே சுரேஷ் பிறேமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

பெப்ரவரி 22ஆம் திகதி தொடங்கிய ஐ.நா மானிட உரிமைகள் பேரவையின் 46வது கூட்டத்தொடர் மார்ச் 23ஆம் திகதி வரை இடம்பெற இருக்கின்றது. ஐ.நாவின் அங்கீகாரம் பெற்ற அமைப்புகளின் ஊடாக இக்கூட்டத்தொடரில் கலந்துகொள்ளும் செயற்பாட்டாளர்கள் கோவிட்-19 வைரஸ் தொற்று காரணமாக இணைய வழி ஊடாக கூட்டத்தொடரில் இணைந்து கொண்டு உரையர்றி வருகின்றார்கள்.

அந்த வகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிரிவு 3 - அனைத்து மனித உரிமைகள் உட்பட சிவில், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் அபிவிருத்திக்கான உரிமை தொடர்பான பொது விவாதத்தில் பிரான்ஸ் தமிழர் பண்பாட்டு அமைப்பின் சார்பாக உரையாற்றிய, சுரேஷ் பிறேமச்சந்திரன் தனது உரையில் முக்கியமாகத் தெரிவித்தவை வருமாறு:

"கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் ஈராக்கிற்கு அடுத்ததாக அதிகமாக காணாமலாக்கப்பட்டோர் உள்ள நாடு இலங்கையாகும். 1980 களிலிருந்து வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நீதிவேண்டி போராடிக் கொண்டிருக்கின்றனர். அதற்கு ஒரு முடிவும் வரவில்லை. இலங்கை அரசால் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இராணுவ மயமாக்குவதை இந்தப் பேரவை ஆதரிப்பதாக தெரிகிறது.

2008 முதல் மே 2009 வரை நடைபெற்ற இறுதி ஆறு அல்லது ஏழு மாத கால இன அழிப்பு போரில் வன்னியில் மட்டும் 1,46,679 இற்கு மேற்பட்ட மக்களுக்கு என்ன நடந்தது என்பதற்கு தகவல் இல்லை. நிறுவனப்படுத்தப்பட்ட கொடுமைபடுத்தும் முகாம்களும், இராணுவ முகாம்களுக்கு அருகில் கொலைக்களமும் உள்ளன. அரசாங்கம் தேசியத்தையும், இறையாண்மையையும், சுயநிர்ணய உரிமையையும் மறுக்கிறது.

தீர்மானம் கொண்டுவர உதவிய உறுப்பு நாடுகளிடம் கீழ்கண்ட விடயங்களை இணைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்: விரைவாக இலங்கைக்கான சிறப்பு அமர்வுகளை உருவாக்க வேண்டும். பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்திற்கு இலங்கையை கொண்டுசேர்க்கவேண்டும். 4 ஆவது திட்ட வரைவுக்குகீழ் சிறப்பு ஆய்வாளரை நியமிக்கவேண்டும். வடக்கு, கிழக்கு மகாணங்களை காலனியாக்குவதை நிறுத்தி, இராணுவ மயமாக்கலை தடுத்து நிறுத்தவேண்டும்" என அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

# ரூ. 4 கோடி பெறுமதியான கஞ்சாவுடன் இருவர் கைது!

*யாழ்ப்பாணம், மார்ச் 12*

4 கோடியே 23 இலட்சம் ரூபா பெறுமதியான கஞ்சாவுடன் எழுவைதீவில் இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம், கடலில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் சந்தேகத்துக்கு இடமான முறையில் நின்ற டிங்கிப் படகை மறித்து சோதனையிட்டனர். இதன்போது 52 பொதிகளாகப் பொதியிடப்பட்ட 141 கிலோ கஞ்சாவை அவர்கள் கைப்பற்றினர்.

அத்துடன், மன்னாரை சேர்ந்த 21, 31 வயதான இருவரையும் அவர்கள் கைது செய்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட கஞ்சாவின் பெறுமதி 4 கோடியே 23 இலட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர்களை, நீதிமன்றில் முற்படுத்துவதற்காக ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் சான்றுப் பொருட்களுடன் கடற்படையினர் ஒப்படைத்தனர். (ஐ)



# பொருளாதாரத்தை மீட்பதற்கு பதில் சீனாவிடம் நிதி பெறுகிறது அரசு

## மங்கள சமரவீர சாடல்



*கொழும்பு, மார்ச் 12*

சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான செயல்திட்டத்தை முன்னெடுப்பதற்குப் பதில், அரசாங்கம் சீனாவிடமிருந்து நிதியைப் பெறுவதற்கு முற்படுகின்றது என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர சாடியுள்ளார்.

இதுகுறித்து மங்கள சமரவீர அவரது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டவை வருமாறு:

சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான முறையான செயல் திட்டமொன்றை முன்னெடுப்பதற்குப் பதிலாக, இலங்கை அரசாங்கம் தற்காலிகமான பொருளாதார மீட்சிக்காக சீனாவிடம் 100 கோடி டொலர் நிதியைப் பெறவுள்ளது. இது எதனடிப்படையிலான பெறுகை? அத்தோடு இதனை மீளச்செலுத்துவதற்குரிய காலப்பகுதி எவ்வளவு? என்று மங்கள சமரவீர கேள்வி எழுப்பியிருக்கிறார்.

இலங்கைக்கு 150 கோடி டொலர் நிதியை (நாணய இடமாற்று அடிப்படை) வழங்குவதற்கு சீனா அனுமதியளித்திருப்பதாக நிதி, மூலதனச்சந்தை மற்றும் மற்றும் அரசதொழில் முயற்சி மற்றும் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார் என்று பிரபல ஆங்கில நாளிதழ் ஒன்றும் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள் (நேரலை)

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள் (நேரலை)

ஈழநாடு
Eelanadu

# நீதிக்கான கதவுகளை பிரித்தானியா இதய சுத்தியுடன் திறக்க வேண்டும்!

## வலியுறுத்துகின்றது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

யாழ்ப்பாணம், மார்ச் 12

**“திருமதி அம்பிகை செல்வகுமார் லண்டனில் மேற்கொண்டு வரும் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் 13 இவது நாளை அடைந்திருக்கும் நிலையில், பிரித்தானிய அரசு தனது நீதிக்கான கதவுகளை இதயசுத்தியுடன் திறந்து, தமிழர் வாழ்வில் ஒளியேற்ற முன்வரவேண்டும்” என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் முன்னணியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

“அம்பிகை செல்வகுமாரின் உணவு தவிர்ப்பு போராட்டம் 13ஆவது நாளை எட்டியிருக்கும் நிலையில், தமிழ் மக்கள், மனித உரிமை ஆர்வலர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, அவரது அகிம்சைப் போராட்டத்துக்கு வழங்கி வரும் ஆதரவுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இணைந்து செயற்பட்டு வருகின்றது. அம்மையாரின் அகிம்சை முறையிலான போராட்டத்தினை சர்வதேச தரப்புக்கள் மதித்து, பாதிக்கப்பட்ட ஈழத் தமிழ் மக்களுக்கான நீதியைப் பெற்றுத்தர இதயசுத்தியுடன் செயற்பட வேண்டும் என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்துகின்றது.

ஜனநாயகத்தை மதிக்கும் நாடாக சர்வதேச அரங்கில் காட்டிக்கொள்ளும் பிரித்தானியா, சர்வதேச நடவடிக்கைக்கான ஐ. நா. மனித உரிமை ஆணையரின் பரிந்துரைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை உதாசீனம் செய்வதும், தன்னுடையதும் தனது அணிசார்ந்த நாடுகளதும் பூகோள நலனை மட்டும் கருதி பிரித்தானியா செயற்படுவதும், ஈழத் தமிழ் மக்களுக்கும், புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கும் மிகுந்த ஏமாற்றத்தையளித்துள்ளது. தமிழர்களின் இன்றைய நிலைமைக்கு பிரித்தானியாவும் பொறுப்புக்கூறவேண்டிய கட்டாயம் உள்ளது.

திருமதி அம்பிகை செல்வகுமாரின் உணவு தவிர்ப்பு போராட்டம் 13 ஆவது நாளை அடைந்திருக்கும் நிலையில், பிரித்தானிய அரசு தனது நீதிக்கான கதவுகளை இதயசுத்தியுடன் திறந்து, தமிழர் வாழ்வில் ஒளியேற்ற முன்வரவேண்டும். அத்துடன், ஏனைய சர்வதேச சக்திகளையும், தமிழர் தரப்பின் நீதிக்காக செயற்பட அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்கின்றோம்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரூ. 1000 வழங்காத நிறுவன அதிகாரிகளுக்கு 6 மாத சிறை!

கொழும்பு, மார்ச் 12

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா நாளாந்த சம்பளத்தை வழங்காத தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தொழில் திணைக்களம் எச்சரித்துள்ளது.

அத்துடன், இந்த ஊதியத்தை வழங்காத நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு 6 மாத சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும் என்று தொழில் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்த மாதம் 5ஆம் திகதி தொடக்கம் செல்லுபடியாகும் வகையில் பெருந்தோட்டத் தொழிலார்களுக்கு நாளாந்த சம்பளமாக ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கான விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச நாளாந்த சம்பளமாக 900 ரூபாவும், வரவு - செலவுத் திட்ட சலுகை கொடுப்பனவாக 100 ரூபாவும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விலை அதிகரிப்பு பிரச்னையை வர்த்தமானி அறிவிப்பு தீர்க்குமா?

## ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸநாயக்க கேள்வி

கொழும்பு, மார்ச் 12

“பொருள் விலை அதிகரிக்கும் பிரச்னையை வர்த்தமானி அறிவித்தல்களின் ஊடாக தீர்க்க முடியுமா?” என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில், “பொருள் விலை அதிகரிப்பு - பொருளாதார வீழ்ச்சி“ என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாடொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். அவர் இங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

”பொருட்களின் விலை அதிகரித்தலென்பது பொருளாதாரப் பிரச்னை அல்ல. மாறாக பொருளாதார பிரச்னை ஏற்படுவதற்கான வெளிப்பாடாகும். பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தவுடன் நுகர்வோருக்கு அது பொருள் விலை அதிகரிப்பாக வெளிப்படும்.

வேலை இல்லாமல் போதல் பொருளாதாரப் பிரச்சினை அல்ல. மாறாக பொருளாதார வீழ்ச்சி அவர்களை அடையும் விதமாகும். அதேபோன்று விவசாயிகளுக்கு அவர்களுடைய விளைச்சலை விற்று வாழ்வாதாரத்தை கொண்டு நடத்த முடியாத நிலைமை மற்றும் கடற்றொழிலாளர்களுக்கு அவர்களுடைய பொருட்களை விற்க முடியாத நிலைமை என்பன பொருளாதர பிரச்னை அல்ல. மாறாக பொருளாதார வீழ்ச்சியின் வெளிப்பாடாகும்.

இந்நிலையில் பொருள் விலை அதிகரிப்புக்கான காரணத்தை அறிந்து கொள்ள முடியாத நிலையில் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுகின்றனர். தேங்காய் விலையை வரையறுத்து வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டது. ஆனால் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட விலையில் தேங்காய் விற்கப்பட்டதா? பொருள் விலை அதிகரிப்பு தொடர்பான பிரச்னையை வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக தீர்க்க முடியுமா? அரிசி விலை அதிகரித்தால் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுகின்றனர். அதுவும் அரிசிக்கென மாத்திரம் ஐந்து வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டுள்ளனர். பொருளாதார சிக்கல் நிலைமையே இதன் காரணமாகும்.

இதன் காரணமாக நாட்டு மக்களால் தமது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அத்துடன், அரசாங்கம் கையாளும் முறைமையின் தோல்வி நாட்டுமக்களின் முன்னிலையில் உறுதியாகியுள்ளது. சமூகத்தில் காணப்படும் இயலாமை



வெளிப்பட்டுள்ளது. ஆகவே இதிலிருந்து மீள்வதற்காக நாம் அனைவரும் விரைவாக ஒன்றிணைந்து கலந்துரையாடலில் ஈடுபடவேண்டும். இந்த கலந்துரையாடலின் வாயிலாக வியாபாரமாக மாறியுள்ள அரசியலை சமூக சேவைக்காக மாற்ற வேண்டும். அதே வேளை முதலாளித்துவம் குவிக்கப்பட்டுள்ள பொருளாதர முறைமையை மாற்றி அனைவருக்கும் பகிர்ந்தளிக்கும் வகையிலான மாற்று பொருளாதார முறைமைக்கு செல்ல வேண்டும். அதற்காக அனைவரையும் ஒன்றிணையுமாறு கேட்டுக்கொள்கின்றேன்“ என அவர் மேலும் தெரிவித்தார்.

# ‘தமிழரும் பௌத்தமும்” சிறப்புரை நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ். பல்கலைக்கழகத்தின் வேந்தரும் வரலாற்றுப் பேராசிரியருமான சி. பத்மநாதனின் சிறப்புரை நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சோமசுந்தரம் அவனியு, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள நூலகம் நிறுவனத்தில் நடக்கும் இந்த நிகழ்வில் பேராசிரியர், ‘தமிழரும் பௌத்தமும்’ என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றுவார்.

இந்த நிகழ்வை யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிக முன்னாள் துறைத்தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் தலைமையேற்று நடத்தவுள்ளார்.

இந்த நிகழ்வில் கொரோனா நிலைமையை கருத்தில் கொண்டு முகக் கவசம் அணிந்து சுகாதார விதிகளைக் கடைப்பிடித்து பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)









# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. கு.ஓ. அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : துறைக்கு அப்பால்(மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-
திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-
சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10

**இரவு**

7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்



10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள் (நேரலை)

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள் (நேரலை)

## ஐங்கரன் ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : சின்மய சிந்தனை
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : யாழ்ப்பாணம் வீரமாகாளி அம்மன் கோவில் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் ஏழாலை முடிமன்னர் கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்ப்பாணம் வீரமாகாளி அம்மன் கோவில் திருவிழா

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : ஆலயப் பாடல்கள்
9.00 மணி : ஜெபமாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.03.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.